2.7.4	பொதி 3	Turnkey அடிப்படையில் 132 kV கிரிட் துணை மின்நிலையங்களை கொள்வனவு செய்தல்: நிர்மாணம் 1. பத்தேகம 132/33 kV GSS (2 × 45 MVA) 2. கலவானா 132/33 kV GSS (2 ×31.5 MVA) நிர்மாணம் 3. மாத்தறை GSS (33 kV GIS, 2 × 132 kV ஒற்றை பஸ் பார் லைன் பேக்கள்) 4. அம்பாந்தோட்டை GSS இன் பெருக்கம் (2 × 132 kV இரட்டை பஸ் பார் லைன் பேக்கள்) 5. குக்குலே PS இன் பெருக்கம் (2 × 132 kV இரட்டை பஸ் பார் லைன் பேக்கள்)	ஆசிய அபிவிருத்தி வங்கி	10,060.00	டிசம்பர் 2025 - நவம்பர் 2027	ADB உடன் கடன் ஒப்பந்தம் கைச்சாத்திடப் பட்டுளளது.

2.7.5	பொதி 4	Turnkey அடிப்படையில் 132 kV நிலத்தடி கேபிள் மின்சார பரிமாற்றல் பாதைக்கான பெறுகை: களனி - கொட்டுகோட DC மின்சார பரிமாற்றல் பாதையில் இருந்து (2 கி.மீ) பேலியகொட GSS வரை SC நிலத்தடி கேபிள் LILO கட்டுமானம்.	ஆசிய அபிவிருத்தி வங்கி	3,567.00	டிசம்பர் 2025 - நவம்பர் 2027	ADB உடனான கடன் இறுதிப்படுத்தல்
2.8	பொதி 4A - **புதிய ஹபரண-புதிய அனுராதபுரம் 220kV மின்சார பரிமாற்றல் பாதை நிர்மாணம்**					
2.8.1	பொதி 4A 6i)	ADB கடன்கள் 3483-SRI மற்றும் 3585-SRI பொதி 4, 6, 10 மற்றும் 12 இன் கீழ் “பரிமாற்ற வலையமைப்பு தேவைகளுக்கான உதிரிபாகங்கள் மற்றும் கருவிகள்” என பொருட்களை கொளவனவு செய்தல்.	ஆசிய அபிவிருத்தி வங்கி கடன் சேமிப்புக்கள்	2,140.00	ஒக்ரோபர்r 2023	97%
2.8.2	பொதி 4A 6ii)	புதிய ஹபராணை - புதிய அனுராதபுரம் 220 kV மின்மாற்றக் கோட்டின் கட்டுமானத்திற்கான குடிமைப் பணிகள், கோபுர கட்டுமானம் மற்றும் சரம் (stringing)பதிக்கும் பணிகள் மற்றும் ஏற்கனவே உள்ள பழைய ஹபராணை - புதிய அனுராதபுரம் 132 kV மின்சாரபரிமாற்றல் பாதையை அகற்றுதல்.	**இ.மி.ச. நிதி**	1,695.00	நவம்பர் 2024 - மே 2026	-
2.8.3	மத வழிபாட்டுத் தலங்களுக்கு கூரையின் மேல் பொருத்தும் சூரிய மின்சக்தி வசதி நிறுவலை வழங்குவதற்கான திட்டம்	மத வழிபாட்டுத் தலங்களுக்கு கூரையின் மேல் பொருத்தும் சூரிய மின்சக்தி வசதி நிறுவலை வழங்குதல்.	SBI **கடன் வசதிகள்**	5353.05	01, ஜனவரி 2024 - 31, டிசம்பர் 2024	75%
2.8.4	சிறிய தீவுகளில் கலப்பின மீள புதுப்பிக்கத்தக்க சக்தி முறையை நிர்மாணித்தல் - நெடுந்தீவு, அனலத்தீவு, நயினாதீவு, இலங்கை (இந்தியா)	நெடுந்தீவு, அனலதீவு, நயினாதீவு	**இந்திய கடன்**	USD 11.3 மில்லியன்	01, ஜனவரி 2024 - 31, மே 2025	35%

அத்தியாயம் 02
முன்னேற்றம் மற்றும் எதிர்காலக் கண்ணோட்டம்

அத்தியாயம் 02
முன்னேற்றம் மற்றும் எதிர்காலக் கண்ணோட்டம்

2.1 2024 ஆம் ஆண்டில் மின்சக்தி பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட செயற்பாடுகள்

2.1.1 மின்சக்தி தொழிற்துறை ஒரு பார்வை

- 2024 ஆம் ஆண்டின் மொத்த மின்சார நுகர்வோரின் என்னிக்கை = 7,717,673

அட்டவணை 2.1.1
நுகர்வோர் அடிப்படை - 2024

	பிரிவுகள்	இ.மி.ச(CEB)	ல.மி.க(LECO)	மொத்தம்
1	வீட்டுப் பாவனை	6,080,699	515,975	6,596,674
2	சமய வழிபாட்டு ஸ்தலங்கள்	44,215	2,731	46,946
3	கைத்தொழில்	71,945	3,522	75,467
4	பொதுத் தேவைகள்	877,776	104,139	981,915
5	ஹோட்டல்கள்	776	88	864
6	அரசாங்க நிறுவனங்கள்	9,285	420	9,705
7	விவசாய நடவடிக்கைகள்	4,061		4,061
8	வீதி விளக்குகள்	-	2,041	2,041
	மொத்தம்	**7,088,757**	**628,916**	**7,717,673**

- 2024 ஆம் ஆண்டின் நிகர மின்சார உற்பத்தி - 17,364 GWh
- 2024 ஆம் ஆண்டின் மின்சார உற்பத்திக்காக நிறுவப்பட்ட மொத்த திறன் - 6,048.37 MW
- கலவை மின்சார உற்பத்திக்காக நிறுவப்பட்ட மொத்த திறன்களின் விபரம் (2024 டிசம்பர் இறுதியில் உள்ளவாறான தரவுகள்)

அட்டவணை 2.1.2
மின்சார உற்பத்தி கலவை -2024

இல	மின்சார உற்பத்தி மூலவளங்கள்	திறன் (Mw)
01	மரபுசாரா மீள புதுப்பிக்கத்தக்க சக்தி (NCRE) (ஏனையவை) - IPP	54.07
02	பெரிய - CEB	1,533.38
03	NCRE (சிறிய நீர்மின்சார உற்பத்தி) - IPP	432.02
04	NCRE(வலையமைப்புடன் இணைக்கப்பட்ட சூரியசக்தி) -IPP	163.36
05	NCRE (கூரையின் மேல் பொருத்தப்பட்ட சூரியசக்தி தகடுகள்) –IPP (மதிப்பீடு செய்யப்பட்ட)	1,415.59
06	NCRE (காற்று) - IPP	163.45

07	NCRE (காற்று) - CEB	103.50
08	அனல் மின்சக்தி(எண்ணெய்) - CEB	801.00
09	அனல் மின்சக்தி(எண்ணெய்) - IPP	482.00
10	அனல் மின்சக்தி(நிலக்கரி) - CEB	900.00
	மொத்தம்	**6,048.37**

IPP- சுதந்திரமான மின்சார உற்பத்தியாளர்கள்
NCRE – மரபுசாரா மீள புதுப்பிக்கத்தக்க சக்தி

2.1.2 மின்சார உற்பத்தி

2024 ஆம் ஆண்டின் மொத்த மின்சார உற்பத்தி 6048 MW ஆகும். இதில் 64% சிறிய நீர்மின் உற்பத்தி, காற்று, சூரியசக்தி மற்றும் உயிர்வாயு அடங்கலான மீள புதுப்பிக்கத்தக்க சத்தியை கொண்டுள்ளது. ஏனையவை நிலக்கரி மற்றும் உலை எண்ணெய் அடிப்படையிலான அனல்மின்சார உற்பத்தியை கொண்டவை ஆகும். 2024 ஆம் ஆண்டின் வருடாந்த மின்சார உற்பத்தி 17,364 GWh (நிகர) ஆகும். இது கடந்த ஆண்டு மின்சார உற்பத்தி 15,942 GWh உடன் ஒப்பிடமிடத்து 8.90% வளர்ச்சியை பதிவுசெய்துள்ளது. மேலும், 2024 ஆம் ஆண்டில் சமார் 55% மின்சார உற்பத்தி மீள புதுப்பிக்கத்தக்க சத்தி மூலம் பெற்றுக்கொள்ளப்பட்டவை ஆகும்.

2024ஆம் ஆண்டில் ஒவ்வொரு சக்தி மூலவளத்திலிருந்தும் கிடைத்த பங்களிப்பு விகித விபரம் கீழ்காணும் அட்டவணையில் தரப்பட்டுள்ளது.

அட்டவணை 2.1.3
மின்சார உற்பத்தி -2024

	சக்தி மூலவளம்	வீதம்
01	நீர் மின் உற்பத்தி (இ.மி.ச)	31.25%
02	சிறிய நீர் வலு (த.உ.)	8.48%
03	காற்று சக்தி (இ.மி.ச)	2.20%
04	காற்று சக்தி (த.உ.)	2.35%
05	கூரையின் மேல் நிறுவி மின்சாரத்தை உற்பத்தி செய்யக் கூடிய சூரிய சக்திப் பலகை - (த.உ.)- (மதிப்பீசெய்யப்பட்ட)	8.24%
06	வலைப்பின்னலுடன் இணைக்கப்பட்ட சூரியசக்தி - (த.உ.)	1.47%
07	அனல் மின் உற்பத்தி (இ.மி.ச)	9.02%
08	அனல் மின் உற்பத்தி (த.உ.)	4.43%
09	நிலக்கரி (இ.மி.ச)	31.56%
10	மரபுரீதியற்ற ஏனைய சக்தி மூலவளங்கள்	1.00%
	மொத்தம்	100.00%

மூலம்- **CEB, LECO, SLSEA**

வரைபு -2.1.1

மின்சார உற்பத்தி -2024



மூலம்–மன்னேற்ற அறிக்கை -2024- இ.மி.ச.

2.1.3 தேசிய மின்சார வலையமைப்பின் நிறுப்பட்ட திறன்

மொத்த நிறுவப்பட்ட திறன் 6,048 MW ஆகும், மேலும் இதன் விபரங்கள் பின்வரும் அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

அட்டணை 2.1.4

மின் உற்பத்தி மூலங்களின் அடிப்படையில் காணப்படும் நிலையான மின் சக்திக் கொள்திறன்

	சக்தி மூலவளம்		நிலையான சக்தி உற்பத்திக் கொள் திறன் (மெ.வொ.)	மின் உற்பத்தி நிலையங்களின் எண்ணிக்கை
1	அனல்சக்தி	மசகு எண்ணெய் (இ.மி.ச)	801	9
2		மசகு எண்ணெய் (சுயாதீன சக்தி உற்பத்தித் தரப்பு)	482	1
3		நிலக்கரி	900	1
4	மீளப் புதுப்பிக்கத்தக்க சக்தி	பிரதான நீர் வலு - (இ.மி.ச)	1,533	19
5		சிறிய நீர் வலு - (சுயாதீன சக்தி உற்பத்தித் தரப்பு)	432	211
6		காற்று - (CEB)	104	18
		காற்று – (சுயாதீன சக்தி உற்பத்தித் தரப்பு)	163	
7		புவியின் மேல் நிறுவி மின்சாரத்தை உற்பத்தி செய்யக் கூடிய சூரிய சக்தி உற்பத்திப் பலகை முறைமை	164	86

		- (சுயாதீன சக்தி உற்பத்தித் தரப்பு)		
8		கூரையின் மேல் நிறுவி மின்சாரத்தை உற்பத்தி செய்யக் கூடிய சூரிய சக்தி உற்பத்திப் பலகை முறைமை - (சுயாதீன சக்தி உற்பத்தித் தரப்பு)	1,415	-
9		**உயிர் வாயு**-(சுயாதீன சக்தி உற்பத்தித் தரப்பு))	54	14
	மொத்த சக்திக் கொள்திறன்		**6,048**	**359**

மூலம் - விரிவான மின் உற்பத்திக் கலப்பு - இ.மி.ச. - 2024

வரைபு -2.1.2

நிலையான மின் சக்தி கொள்திறன்-2024



2.1.4 நீர் மின் உற்பத்தி விரிவாக்கத் திட்டங்கள்

கொத்மலை, உக்குவெல, விக்டோரியா மற்றும் இரந்தெனிகல ஆகிய மின் உற்பத்தி நிலையங்கள் மற்றும் தம்பபவனி காற்று சக்தி மின் உற்பத்தி நிலையம் ஆகியவற்றை மையமாகக்கொண்ட செயற்பாடுகளின் நிலை, வினைத் திறன், சக்திக் கொள்திறன், மின்சார உற்பத்திகள் மற்றும் இயக்கச்செயற்பாட்டு காலம் என்பவற்றை மேம்படுத்தவும், அந்த மின் உற்பத்தி நிலையங்களின் சக்திக் கொள்திறன்களையும் மற்றும் நம்பத்தகு தன்மையையும் மேலும் மேம்படுத்தவும் இந்தக் கருத் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டன

2024 ஆம் ஆண்டில் மின்சார வலையமைப்புக்கு 157 மின் சக்திக் கொளதிறனை சோ◌க்கின்ற களணிதிஸ்ஸ 2-வது அனல் சுழற்சி மின் உற்பத்திப் பொறித் தொகுதி குறித்த ஆண்டு காலப் பகுதியினுள் செயற்படுத்தப்பட்டது. மொரகொல்ல நீர் வலு மின் உற்பத்தி நிலையம், உமா ஓயா பல நோக்கு செயற்பாட்டு அபிவிருத்திக் கருத் திட்டம் மற்றும் திரவநிலை இயற்கை எரிவாயு மின் உற்பத்தி நிலையம் போன்ற புதிய மின் உற்பத்திக் கொள்திறன் உடைய மின் உற்பத்திக் கருத் திட்டங்கள் சம்பந்தமான பணிகள் 2024 ஆம் ஆண்டு முழுதிலும் இடையறாது முன்னெடுத்துச்செல்லப்பட்டன. 2024 ஆம் ஆண்டில் உமா ஓயா நீர் மின் நிலையத்தை மின்மயமாக்குவதன் மூலம் நாட்டின் கடைசி பெரிய நீர் மினசார நிலையத்தை செயற்படுத்துதல் மற்றும், 2025 ஆம் ஆண்டில் மொரகொல்ல நீர் மின் நிலையத்தை செயற்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்பட்டுள்ளதுடன், நமது தாய்நாடு 2025 ஆம் ஆண்டில் ஒரு முக்கியமான மைல்கல்லை கடக்கும் என்று எதிர்பார்க்கப்படுகிறது. 2024 ஆம் ஆண்டு, நாட்டில் முதல் இரண்டு மிதக்கும் சூரிய மின் உற்பத்தி நிலையங்கள் சோதனை அளவில் சக்தியூட்டப்பட்டன

அட்டணை 2.1.5
தற்போது நடைபெற்று வரும் மின் உற்பத்தி திட்டங்களின் முன்னேற்றம்

இல.	செயற்றிட்டம்/ நிகழ்ச்சித்திட்டம்	முன்னேற்றம்	பூர்த்தி செய்ய எதிர்பார்க்கப்படும் திகதி
1	31 MW மொரகொல்ல நீர் மின்வலு ஆலை	நிர்மாணம் நடைபெறுவதுடன் அனைத்தும் இறுதிக் கட்டத்தில் உள்ளன.	2025 – இறுதி காலாண்டு
2	350 MW சோபதனவி NG இணைந்த சுற்று ஆலை – கெரவலப்பிட்டிய.	நிர்மாணம் நடைபெறுவதுடன் அனைத்தும் இறுதிக் கட்டத்தில் உள்ளன.	எரிவாயு விசையாழி 2024 ஆகஸ்டில் செயற்பாட்டை ஆரம்பிக்க அதிகாரம் அளிக்கப்பட்டது. நீராவி விசையாழியின் செயற்பாட்டை 2025 இல் ஆரம்பிக்க அதிகாரம் அளிக்கப்படவுள்ளது.
3	100 MW /100 MWh மின்கல சேமிப்பு முறைமை – கொலன்னாவ.	நிதி உறுதி செய்யப்பட்டுள்ளது. RFP ஆவணத் தயாரிப்பு ஆரம்பிக்கப்படவுள்ளது.	2026
4	350 MW சோபதனவி NG இணைந்த சுற்று ஆலை – கெரவலப்பிட்டிய.	PPA பேச்சுவார்த்தைகள் நடைபெறுகின்றன.	திறந்த சுற்று –2026 இணைந்த சுற்று –2027
5	200 MW இயற்கை எரிவாயு IC என்ஜின் மின்வலு ஆலை.	CANC & PC நியமிக்கப்பட்டுள்ளது.	2028
6	130 MW எரிவாயு விசையாழிகள் - களனிதிஸ்ஸ.	பெறுகை தற்காலிகமாக நிறுத்தப்பட்டுள்ளது.	2030

மூலம்: முன்னேற்ற அறிக்கை-2024 -CEB

2.1.5 ஏனைய தூய சக்தி மின்சாரத் திட்டங்கள்

களனிதிஸ்ஸவில் உள்ள இரண்டாவது ஒருங்கிணைந்த சுழற்சி மின் உற்பத்தி நிலையம் இந்த ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டது, இதன் மூலம் மின் அமைப்பில் 157 மெகாவாட் சக்தி திறன் சேர்க்கப்பட்டது.

அனல் உற்பத்தி முன்னணியில், திரவ பெற்றோலிய வாயு உட்கட்டமைப்பு பூர்தியடைந்ததும், எரிபொருளின் முதன்மை ஆதாரமாக இயற்கை வாயுவைப் பயன்படுத்தும் கெரவலப்பிட்டி மின் உற்பத்தி நிலையத்தின் செயற்பாட்டுக்கு வந்ததும், சுத்தமான எரிசக்தி பிரதிபலன்களை பூாத்திசெய்யும்.

2.1.6 மரபுசாரா மீள புதுப்பிக்கத்தக்க சக்தி(NCRE) அணுகலை மேம்படுத்துதல்

மரபுசாரா மீள புதுப்பிக்கத்தக்க சக்தி வளங்களை மேம்படுத்தும் பணிகளை ஊக்குவிப்பதற்கு அமைச்சு முன்னுரிமை அளித்துள்ளது.

தற்போது நடைபெநடைற்றுக்கொண்டிருக்கும் மரபுசாரா மீள புதுப்பிக்கத்தக்க சக்தி(NCRE) அபிவிருத்திகளின் முன்னேற்றம் பின்வருமாறு

அட்டவணை 2.1.6
பாரிய அளவிலான திட்டங்கள்

இல.	செயற்றிட்டம் / நிகழ்ச்சித்திட்டம்	முன்னேற்றம்	பூர்த்தி செய்ய எதிர்பார்க்கப்படும் திகதி
1	சியம்பலாந்துவ 100MW சூரிய சக்தி மின்வலுச் செயற்றிட்டம்	PPA, மின் பரிமாற்ற உடன்படிக்கை மற்றும் நடைமுறைப்படுத்தல் உடன்படிக்கை ஆகியன கைச்சாத்திடப்பட்டன.	2025 இன் இறுதிக் காலாண்டு
		மின் பரிமாற்ற மார்க்க நிருமாணங்கள் நடைபெறுகின்றன.	
2	மன்னார் 250MW காற்றாலை மின்வலுச் செயற்றிட்டம்	வழங்கப்பட்ட மின்வலு ஆலைக்கான அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. வழங்கப்படுவதற்கான PUCSL அங்கீகாரம் நிலுவையில் உள்ளது. AG தடைநீக்க இசைவு நிலுவையில் உள்ளது.	2027 இன் இரண்டாம் காலாண்டு
3	பூநகரி 234MW காற்றாலை மின்வலுச் செயற்றிட்டம்	வழங்கப்பட்ட மின்வலு ஆலைக்கான அமைச்சரவை அங்கீகாரம் பெறப்பட்டுள்ளது. வழங்கப்படுவதற்கான PUCSL அங்கீகாரம் நிலுவையில் உள்ளது. AG தடைநீக்க இசைவு நிலுவையில் உள்ளது.	2027 இன் இரண்டாம் காலாண்டு
		மின் பரிமாற்ற வசதிக்கான PPA பேச்சுவார்த்தைகளும் விலை தொடர்பான பேச்சுவார்த்தைகளும் நடைபெறுகின்றன.	
4	சம்பூர் 50MW சூரிய சக்தி மின்வலுச் செயற்றிட்டம்	விருத்தியாளரின் முன்மொழிவு PC / CANC இன் மதிப்பீட்டில் உள்ளது.	2026 இன் இறுதிக் காலாண்டு
5	மன்னார் 50MW காற்றாலை மின்வலுச் செயற்றிட்டம்	ஒப்பந்தம் வழங்கப்பட்டுள்ளது	2026 இன் இரண்டாம் காலாண்டு

அட்டவணை 2.1.7
விலைமனு கோரப்பட்ட செயற்றிட்டங்கள்

	செயற்றிட்டம் / நிகழ்ச்சித்திட்டம்	ஆலைகளின் எண்ணிக்கை	மொத்தக் கொள்ளளவு (MW)	முன்னேற்றம்	பூர்த்தி செய்ய எதிர்பார்க்கப்படும் திகதி		
					2024	2025	2026
1	90X 1MW சூரிய PV மின்வலு ஆலைகளின் விலைமனு	50	50	இயக்குவதற்கான அதிகாரம் அளிக்கப்பட்டவை - 1 MW x 45 ஆலைகள் நிருமாணிக்கப்பட்டுக் கொண்டிருப்பவை – 1 MW x 5 ஆலைகள்		5	
2	10MW பொலநறுவை சூரிய PV மின்வலு ஆலையின் விலைமனு	1	10	இயக்குவதற்கான அதிகாரம் அளிக்கப்பட்டுள்ளது.	10		
3	30MW தரையில் பொருத்தப்பட்ட /மிதக்க விடப்பட்ட சூரிய PV மின்வலு ஆலைகளின் விலைமனு (1-5MW)	2	5	PPA கைச்சாத்திடப்பட்டுள்ளது, நிருமாணிக்கப்பட்டுக் கொண்டிருக்கின்றன.		5	
	30MW தரையில் பொருத்தப்பட்ட /மிதக்க விடப்பட்ட சூரிய PV மின்வலு ஆலைகளின் விலைமனு (1-5MW) - மறுவிலைமனு	9	27	LOI கைச்சாத்திடப்பட்டுள்ளது, PPA கைச்சாத்திடுவது நிலுவையில் உள்ளது.			27
4	40MW தரையில் பொருத்தப்பட்ட /மிதக்க விடப்பட்ட சூரிய PV மின்வலு ஆலைகளின் விலைமனு (5MW அளவில்)	8	40	LOI கைச்சாத்திடப்பட்டுள்ளது, PPA கைச்சாத்திடுவது நிலுவையில் உள்ளது.		30	10
5	20MW காற்றாலை மின்வலு ஆலைகளின் விலைமனு (2.5-10MW அளவில்) – மன்னாரில்	4	20	LOI கைச்சாத்திடப்பட்டுள்ளது, PPA கைச்சாத்திடுவது நிலுவையில் உள்ளது.		20	
6	70MW, AC தரையில் பொருத்தப்பட்ட சூரிய PV மின்வலு ஆலைகள் - (1-5) MW, AC இல்	12	51	LOI கைச்சாத்திடப்பட்டுள்ளது, 6 செயற்றிட்டங்களுக்கு PPA கைச்சாத்திடப்பட்டுள்ளது (26MW) மீதி 6 செயற்றிட்டங்களுக்கு PPA கைச்சாத்திடுவது நிலுவையில் உள்ளது.		51	
	70MW, AC தரையில் பொருத்தப்பட்ட சூரிய PV மின்வலு ஆலைகள் - (1-5) MW, AC - மறுவிலைமனு	7	19	6 செயற்றிட்டங்களுக்கு LOI கைச்சாத்திடப்பட்டுள்ளது, 1 நிலுவையில் உள்ளது.			19
7	165MW தரையில் பொருத்தப்பட்ட சூரிய PV மின்வலு ஆலைகள் - (1-5) MW,AC இல்	-	165	விலைமனு மதிப்பீடு நிறைவடைந்துள்ளது, வழங்குவதற்கான அமைச்சரவைத் தீர்மானம் நிலுவையில் உள்ளது.			165

அட்டவணை 2.1.8
ஊட்டத்தில் உள்ள விதிப்பனவின் (Feed In- Tariff) கீழான செயற்றிட்டங்கள்

செயற்றிட்டத் தொழினுட்பம்	2024 ஆம் ஆண்டு		2025 ஆம் ஆண்டு	2026 ஆம் ஆண்டு
	அதிகாரம் அளிக்கப்பட்டவை (MW)	அதிகாரம் அளிக்கப்பட வேண்டியவை (MW)	அதிகாரம் அளிக்கப்பட வேண்டியவை (MW)	அதிகாரம் அளிக்கப்பட வேண்டியவை (MW)
சூரிய PV	10	15	150	150
காற்றாலை	-	-	10	10

முன்னேற்ற அறிக்கை 2024- இ.மி.ச

அட்டவணை 2.1.9
ஏனைய திட்டங்கள்

இல	செயற்றிட்டம் / நிகழ்ச்சித்திட்டம்	முன்னேற்றம்	பூர்த்தி செய்ய எதிர்பார்க்கப்படும் திகதி
1	தேசிய அமைப்பு கட்டுப்பாட்டு மையத்தில் மீள புதுப்பிக்கத்தக்க சக்தி கட்டுப்பாடு மற்றும் கண்காணிப்பு மையம்	நிதி உறுதி செய்யப்பட்டுள்ளது. RFP ஆவண தயாரிப்பு பணிகள் ஆரம்பிக்கப்படும்.	2026
2	மஹா ஓயாவில் 600 மெகாவாட் பம்ப் களஞ்சிய மினசார் நிலையம்	சாத்தியக்கூறு ஆய்வு பூர்த்திசெய்யப்பட்டுள்ளது. திட்டம் NPD ஒப்புதலுக்கு சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.	2034

2.1.7 மின்சார பரிமாற்றல் மேம்பாடுகள்

2024 ஆம் ஆண்டின் இறுதியில்,947 புதிய மின்சாரப் பகிர்ந்தளிப்பு உப மின்நிலையங்கள் மின்சார முறைமையினுள் இணைக்கப்பட்டன. ஆண்டு இறுதிக்குள் மொத்தம் 220 கி.வொ. மற்றும் 132 கி.வொ. மேல்நிலை மற்றும் நிலகீழ் 3,398 கி.மீ. நீளமான மின்சார செலுத்துகை மார்க்கங்கள் மின்சார முறைமையினுள் இணைக்கப்பட்டன.

இ.மி.ச. சபையினால் 2024 ஆம் ஆண்டு காலப் பகுதியினுள் புறக்கோட்டை கிரிட் உப மின் நிலையத்தின் நிர்மாணப் பணிகள் நிறைவு செய்யப்பட்டன. அதன் பயனாக கிரிட் உப மின்னிலையத்தின் ஒட்டுமொத்த சக்திக் கொள்திறன் அளவு 12,379 மெ.வொ. வரை அதிகரித்திருந்தது. ஆண்டு இறுதியளவில் நாட்டினுள் காணப்படும் ஒட்டுமொத்த கிரிட் உப மின் நிலையங்களின் எண்ணிக்கை 90 வரை அதிகரித்தது.

கொழும்பு பெரும்பாக மின்சார செலுத்துகை மற்றும் மின்சார இழப்புக் குறைப்புக் கருத் திட்டம், பசுமை மின் உற்பத்தி அபிவிருத்தி மற்றும் மின்சார வினைத் திறன் ஊக்குவிப்புக் கருத் திட்டம், தேசிய மிசன்சார பரிமாற்றல் மற்றும் மின்சாரப் பகிர்ந்தளிப்பு வலையமைப்பு அபிவிருத்தி மற்றும் மின்சார வினைத் திறன் ஊக்குவிப்புக் கருத் திட்டம், திருகோணமலை நிலக் கரி அனல் மின் உற்பத்திக் கருத் திட்டம் மற்றும் மின்சார செலுத்துகை மார்க்க நிர்மாணக் கருத் திட்டம் போன்ற மின்சார செலுத்துகை மார்க்க கருத் திட்டங்கள் 2024 ஆம் ஆண்டு காலப் பகுதியில் இடையறாது தொடர்ச்சியாக மேற்கொள்ளப்பட்டன.

தேசிய மின்சார வலையமைப்புக்கு விநியோகிக்கப்படும் மின்சாரம் 220 கி.வொ. மற்றும் 132 கி.வொ. மின்சார செலுத்துகை மார்க்க வலையமைப்பை பயன்படுத்தி சகல மின் உற்பத்தி நிலையங்களின் மூலம் அனுப்பப்படும்.

கடந்த ஆண்டு காலப் பகுதியினுள், மின்சார பரிமாற்றல் மார்க்கம் மற்றும் கிரிட் உப மின் நிலையங்கள் என்பவற்றின் அபிவிருத்தி பற்றிய விபரங்கள் பின்வருமாறு.

அட்டவணை 2.1.10
வலையமைப்பு சமர்ப்பிப்புக்களின் சாராம்சம்

வலையமைப்பு சமர்ப்பிப்பு	2024		புதிதாக சேர்க்கப்பட்ட வலையமைப்பு துணை மின்நிலைய விவரங்கள்		
	எண்ணிக்கை	திறன் (MVA)	வலையமைப்பின் பெயர்	வோல்ட் (kV)	திறன் (MVA)
132/33kV	63	4973.5	வகவத்த	132/33	90
220/132/33 kV	4	1600/380			
220/132 kV	9	4010			
132/11 kV	8	792			
220/33 kV	6	624			

மேலும், பின்வரும் திட்டங்கள் செயற்படுத்தப்பட்டு வருகின்றன, மேலும் சில திட்டங்கள் அதன் பரிமாற்ற வலையமைப்பின் அபிவிருத்தியை இலக்காகக் கொண்டு பரிமாற்றல் பிரிவால் நிதி பெறப்படும்போது செயற்படுத்தத் தயாராக உள்ளன.

அட்டவணை 2.1.11
நடைபெற்றுக் கொண்டிருக்கும் மின்சார பரிமாற்ற அபிவிருத்திச் செயற்றிட்டங்கள்

செயற்றிட்டம் / கிளை	பொதி	செலவு (ரூபா மில்லியன்)	2024-10-31 இல் பௌதிக முன்னேற்றம்	பூர்த்தியடையும் திகதி
பாரிய கொழும்பு மின் பரிமாற்ற மற்றும் இழப்பைக் குறைக்கும் செயற்றிட்டம்	கெரவலப்பிட்டிய தொடக்கம் கொழும்பு L வரை இரண்டாவது 220 kV கம்பிவடத்தின் நிருமாணம்	13,055	11.50%	2026 ஆகஸ்ட்
	மின்கல சக்தி சேமிப்பக முறைமை	4,419	35.00%	2025 டிசம்பர்
திருகோணமலை மின்சார பரிமாற்றல் விரிவாக்கல் செயற்றிட்டம்	ஹபரணை - வெயாங்கொடை 220 kV மின் பரிமாற்ற மார்க்க நிருமாணச் செயற்றிட்டம் துண்டம் A - உபமின் நிலையம்	6,958	100.00%	பூர்த்தி அடைந்துள்ளது.
	ஹபரணை - வெயாங்கொடை 220 kV மின் பரிமாற்ற மார்க்க நிருமாணச் செயற்றிட்டம் துண்டம் B - மின் பரிமாற்ற மார்க்கம்	17,770	100.00%	பூர்த்தி அடைந்துள்ளது.
பசுமை மின்வலு அபிவிருத்தி மற்றும் சக்தி	பொதி 2/ துண்டம் B2 A - பாதுக்க - ஹொரண 132kV TL இன் நிருமாணம்	600	100.00%	பூர்த்தி அடைந்துள்ளது.

வினைத்திறன் மேம்பாட்டு முதலீட்டுச் செயற்றிட்டம் (கட்டம் 2)	PMU 2- பொதி 8/ துண்டம் B -அம்பலாங்கொடை 132/33 kVமின்தொகுப்பு உபமின் நிலையத்தின் விருத்தியாக்கம், பன்னல 132/33 kV மின்தொகுப்பு உபமின் நிலையத்தின் விருத்தியாக்கம், 132/33 kV 31.5 MVA உடைய 2 உதிரி மின்மாற்றிகளின் வழங்கல்	1,740	100.00%	பூர்த்தி அடைந்துள்ளது.
	பொதி 9 : 220 kV கெரவலப்பிட்டியவில் ஆளியிடல் நிலையம்	2,919	100.00%	பூர்த்தி அடைந்துள்ளது.
	SESRIP: பொதி 7- துண்டம் A1: பன்னிப்பிட்டிய மின்தொகுப்பு உபமின் நிலையங்களில் 100Mvar BSC இன் நிறுவல்	1103.5	95.00%	2024 டிசம்பர்
	SESRIP: பொதி 7- துண்டம் A2: பியகம மின்தொகுப்பு உபமின் நிலையத்தில் நிலையான Var முறைமையின் (SVS) நிறுவல்	1680.8	100.00%	2024 மே
தேசிய மின் பரிமாற்ற, விநியோக வலையமைப்பு அபிவிருத்தி மற்றும் வினைத்திறன் முதலீட்டுச் செயற்றிட்டம்	பொதி 1: 400kV, 220kV மற்றும் 132kV மின் பரிமாற்ற மார்க்கங்களின் நிர்மாணம்	13,003	84.00%	2025 டிசம்பர்
	பொதி 2 : மின்தொகுப்பு உபமின் நிலையங்களின் நிர்மாணம் விருத்தியாக்கமும்	7,418	91.00%	2025 டிசம்பர்
	பொதி 3: மின் பரிமாற்ற மார்க்கங்களின் (220kV, 132kV) நிருமாணம்	12,000	59%	செயற்பாடுகள் மீள அமுல்படுத்தப்பட்டுள்ளது
	பொதி 4: மின் விநியோக உபமின் நிலையங்கள் மற்றும் கம்பிவடங்களின் (33kV, 11kV, 0.4kV) நிருமாணம்	4,594		ஒப்பந்தம் முடிவுறுத்தப்பட்டுள்ளது
மின் பரிமாற்ற நிருமாணச் செயற்றிட்டங்கள்	மெதகம - அம்பாறை 132 kV மின் பரிமாற்ற மார்க்கத்தின் புனரமைப்பு	3,206	45%	2025 சனவரி
	விக்டோரியா - ரன்தம்பே 220 kV மின் பரிமாற்ற மார்க்கத்தின் நிருமாணம்	1,400	6%	2024 டிசம்பர்
	அத்துருகிரிய - கொலன்னாவ 132kV மின் பரிமாற்ற மார்க்கத்தின் விருத்தியாக்கம்	170	20%	2024 யூன்
	கொலன்னாவ - பன்னிப்பிட்டிய 132kV மின் பரிமாற்ற மார்க்கத்தின் புனரமைப்பு	960	10%	2024 யூன்
	களனிதிஸ்ஸ - கொலன்னாவ 132kV மின் பரிமாற்ற மார்க்கத்தின் உயரத்தை அதிகரித்தல்	702	9%	2024 ஏப்ரல்

	புதிய அநுராதபுரம் GS இல் 2x50MVAr மின் உலையின் நிறுவலும் மன்னார் GS இல் 1x50MVAr மின் உலையின் நிறுவலும்	1,463	100.00%	பூர்த்தி அடைந்துள்ளது.
	வேகவத்த மின்தொகுப்பு உபமின் நிலையத்தின் நிருமாணம் (2x45MVA T/F with DBB)	1,898	99.00%	2023 டிசம்பர்
	களனிதிஸ்ஸ 132kV GIS இன் விரிவாக்கம்	464	98.00%	2024 மார்ச்
	புதிய பொல்பிட்டிய ஆளியிடல் நிலையத்தில் இரண்டு 220 kV இரட்டை பஸ்பார்கள் கொண்ட மின் பரிமாற்ற மார்க்க நுழைவுவழியின் நிருமாணம்	291	100.00%	பூர்த்தி அடைந்துள்ளது.
	கொட்டுகொட விருத்தியாக்க வேலை	73	100.00%	பூர்த்தி அடைந்துள்ளது.
	பலாங்கொடை விருத்தியாக்க வேலை	67	55.00%	2025 பெப்ரவரி
	அத்துருகிரிய விருத்தியாக்க வேலை	15	100.00%	பூர்த்தி அடைந்துள்ளது.
	ரத்மலானை மின்தொகுப்பு உபமின் நிலையத்தில் இரண்டு 33kV ஊட்டி நுழைவுவழிகளின் நிருமாணம்	148	100.00%	பூர்த்தி அடைந்துள்ளது.
	ரன்தம்பே ஆளி முற்றத்தில் 220kV GIS இன் நிருமாணம்	2,809	6.00%	2026 டிசம்பர்
	விக்டோரியா PP இல் ஒரு 220kV 1 1/2 பிரிகலன் முறைமையின் நிருமாணம்	229	80.00%	2025 ஏப்ரல்
	ரந்தெனியவில் (உமா ஓயா நீர் மின்வலுச் செயற்றிட்டம்) 132kV ஆளி முற்றத்தின் நிருமாணம்	350	100.00%	பூர்த்தி அடைந்துள்ளது.
	அம்பாறை GS இல் 132kV ஒற்றை பஸ் பார் மின் பரிமாற்ற மார்க்க நுழைவு வழியின் நிருமாணம்	85	8.00%	2025 மார்ச்
	14 GS களில் உள்ள பழைய நிலையான இடைமாற்றுகளின் மாற்றீடு	212	28.00%	2025 மார்ச்
	மத்துகம GS பகுதியில் உள்ள 33kV இன் புனர்நிர்மாணம்	595	9.00%	2025 டிசம்பர்
	ஆனியகந்த GS இல் விருத்தியாக்கம்	353	14.00%	2025 டிசம்பர்
	சுன்னாகம் GS இல் விருத்தியாக்கம்	610	14.00%	2025 டிசம்பர்
	நடுக்குடா GS இல் விருத்தியாக்கம்	1,526	5.00%	2025 செப்ரெம்பர்
	குக்குளேகங்கை ஆளி முற்றத்தின் விருத்தியாக்கம்	306	3.00%	2025 ஆகஸ்ட்
	புதிய அநுராதபுரம் GS இன் விருத்தியாக்கம்	600	3.00%	2025 யூன்

மின் பரிமாற்றச் செயற்றிட்டங்கள்	**பொருள்களின் பெறுகை** மின் பரிமாற்ற வலையமைப்புத் தேவைகளுக்கான பாகங்கள் மற்றும் கருவிகளாக பொருள்கள் / உபகரணங்களின் பெறுகை - சம்பூர் கப்பல்துறை மின் பரிமாற்ற அபிவிருத்திச் செயற்றிட்டத்தின் கீழான பொதி 4,5,6,10, 11	4,381	98.00%	2025 மார்ச்
	பூநகரி - கிளிநொச்சி 220kV D/C மின் பரிமாற்ற மார்க்கத்தின் நிருமாணத்திற்கான ஆரம்ப வேலைகள் PSRSP-Ph-02-OU2	3,400	12%	2025 டிசம்பர்
மின்வலு முறைமையை வலுப்படுத்தல் மற்றும் மீள்புதுப்பிக்கத்தக் க சக்தி ஒருங்கிணைப்புச் செயற்றிட்டம்	பொதி 4A: ADB இன் கடன்கள் 3483-SRI மற்றும் 3585-SRI இன் பொதிகள் 4, 6, 10, 12 இன் கீழான "மின் பரிமாற்ற வலையமைப்புத் தேவைகளுக்கான பாகங்கள் மற்றும் கருவிகளாக" பொருள்களின் பெறுகை"	3,633	விலைமனு காலப் பகுதிக்குள்	2025

அட்டவணை 2.1.12
நிதியளிக்கப்பட வேண்டிய மின்சார பரிமாற்ற அபிவிருத்தி திட்டம் தொடர்பான விவரங்கள்

செயற்திட்டங்கள்	பூர்த்தி செய்ய எதிர்பார்க்கப் படும் ஆண்டு	மொத்தச் செலவு மதிப்பீடு (ரூபா மில்லியன்)	2025 ஆம் ஆண்டிற்காக தேவைப்படும் நிதி (ரூபா மில்லியன்)
பிரதிப் பொது முகாமையாளர் (மின் பரிமாற்றச் செயற்றிட்டங்கள்)			
CEATP -1 துண்டம் – A I. புதிய ஹபரணை SS தொடக்கம் கப்பல்துறை GS வரை 77 km நீளமான 220 kV இரட்டைச் சுற்று மின் பரிமாற்ற மார்க்கத்தின் நிருமாணம்	2027	12,863	1,950
துண்டம் – B I. புதிய ஹபரணை 220/132 kV ஆளியிடல் நிலையத்தின் விருத்தியாக்கம் (2x220 kV மின் பரிமாற்ற மார்க்கத்தின் நுழைவுவழிகள்)			
II. கப்பல்துறை 220/33 kV மின்தொகுப்பு உபமின் நிலையத்தின் திருத்தம்			
CEATP- II துண்டம் A - (i) 132/33 kV 2 X 31.5 MVA வெலிமட மின்தொகுப்பு உபமின் நிலையத்தின் நிருமாணம்	2027	16,674	1,668
(ii) 132/33 kV 2 X 31.5 MVA கீரியங்கல்லிய மின்தொகுப்பு உபமின் நிலையத்தின் நிருமாணம்			
(iii) புதிய சிலாபம் GS இன் விருத்தியாக்கம்			
(iv) புத்தளம் GS இன் விருத்தியாக்கம்			
(v) பதுளை மற்றும் லக்ஷபான GS இன் விருத்தியாக்கம்			
(vi) சமனலவெவ மற்றும் எம்பிலிப்பிட்டிய GS இன் விருத்தியாக்கம்			
துண்டம் B - (i) சமனலவெவ - எம்பிலிப்பிட்டிய 132kV TL இன் கொள்ளளவை மேம்படுத்தல்			
(ii) 74.5 km பதுளை - லக்ஷபான 132kV TrL இன் கொள்ளளவை மேம்படுத்தல்			
துண்டம் C - புத்தளம் - புதிய சிலாபம் 132kV TL இன் புனரமைப்பு			
SKTDP சம்பூர் - கப்பல்துறை 220 kV இரட்டைச் சுற்று TL இன் நிருமாணம் மற்றும் சம்பூரில் 220/33kV சேகரிப்பானின் நிருமாணம்	2026	7,896	7,106
PSRSP : கட்டம் II P 2 - OU 01 வாரியப்பொல 220/132kV SS இன் நிருமாணம், வாரியப்பொல - குருநாகல் 132 kV இரட்டைச் சுற்று 22 km TL இன் நிருமாணம், ஹபரணை வெயாங்கொடை 220kV TL தொடக்கம் வாரியப்பொல SS (3 km) வரை இரட்டை உள் - வெளி இணைப்பு நிருமாணம், குருநாகல் 132 kV GS இன் விருத்தியாக்கம்	2027	7,710	771
PSRSP : கட்டம் II P 2 - OU 02 (i) ஏக்கல 132/ 33 kV GS, 4 km தூரமான கொட்டுகொட தொடக்கம் களனி வரை 132 kV TL இன் இரட்டை உள் மற்றும் வெளி இணைப்பு	2027	3,897	556
(ii) முன்மொழியப்பட்ட யக்கல GS இற்கு யக்கல 132/33 kV GS, 132 kV இரட்டைச் சுற்று TL அண்ணளவாக 10 km - கிரிந்திவெல GS		3,226	479

PSRSP : கட்டம் II P 2 - OU 03 132/11 kV கண்டி நகர் GS இன் நிருமாணம், கண்டி நகர் GS இற்கான 6 km TL இன் நிருமாணம் மற்றும், கிரிபத்கும்புர மற்றும் உக்குவளை GS களின் விருத்தியாக்கம்	2027	6,150	900
132/33kV, 31.5MVA வெலிகம GS இன் நிருமாணம்	2027	3,824	520
மன்னார் - வவுனியா 220 kV மின் பரிமாற்ற மார்க்க கடத்தியின் மேம்படுத்தல்	2026	690 (with Taxes)	460
GCT மற்றும் DLRP கொழும்பு நகர் மின் பரிமாற்ற வலையமைப்பு அபிவிருத்திச் செயற்றிட்டம் - கட்டம் 2	2027	30,295	-
2xZebra உடன் பன்னிப்பிட்டிய - பாணந்துறை 132 kV மின் பரிமாற்ற மார்க்கத்தின் நிருமாணம்	2027	2,020	406
2xZebra உடன் பாணந்துறை T - மத்துகம 132kV மின் பரிமாற்ற மார்க்கத்தின் நிருமாணம்	2027	2,766	734
Zebra உடன் லக்ஷபான - விமலசுரேந்திர 132 kV மின் பரிமாற்ற மார்க்கத்தின் நிருமாணம்	2027	683	181
Zebra உடன் பலாங்கொடை - தெனியாய - காலி 132 kV மின் பரிமாற்ற மார்க்கத்தின் நிருமாணம்	2027	6,439	1,708
பாதுக்க GSS இல் 300 Mvar STATCOM அலகின் நிறுவல்	2027	11,290	2,994
தெஹிவளை - இரத்மலானை 132 kV நிலத்தடி கம்பிவட நிருமாணம்	2027	4,679	1,241
4xMoose உடன் புதிய ஹபரணை - வவுனியா - N - சேகரிப்பான் (220 kV செயற்பாட்டுக் கட்டம்) மின் பரிமாற்ற மார்க்கம்	2027	36,067	9,565
Zebra உடன் புதிய லக்ஷபான - பலாங்கொடை 132 kV மின் பரிமாற்ற மார்க்கத்தின் புனரமைப்பு	2027	2,845	2,264
Zebra - லக்ஷபான தொகுதிக்கான 132 kV Lynx மின் பரிமாற்ற மார்க்கங்களின் கொள்ளளவு மேம்பாடு	2027	1,444	383
வெலிகம 132/33 kV மின்தொகுப்பு உபமின் நிலையத்தின் நிருமாணம்	2027	2,423	643
புதிய ஹபரணை - PSPP - கிரிந்திவெல 400 kV மின் பரிமாற்ற வலையமைப்பின் அபிவிருத்தி	2027	35,335	9,371
துல்ஹிரிய கொள்ளளவி வைப்பகங்களின் மாற்றீடு	2027	154	123

2.1.8 காலநிலை மாற்றத்தைக் குறைத்தல் மற்றும் மின் சக்தித் துறையில் தேசிய அளவில் நிர்ணயித்த பங்களிப்புகள் (NDCs)

காலநிலை மாற்றங்களைக் குறைக்கும் பொருட்டு பச்சைவீட்டு வாயு எரிதகனம் குறைக்கப்படுகின்றது. 2050 இல் காபன் எரிதகனத்தை முற்றிலும் ஒழிக்க திட்டமிடப்பட்டுள்ளது. இதன் நிமித்தம் மின் சக்தித் துறைக்கு செயற்படுத்தல் மற்றும் மேற்பார்வை செய்தல் (NDC) திட்டம் தயாரித்து நிறைவு செய்யப்பட்டுள்ளது. தேசிய செயற்பாட்டுக் குழுவுக்கு மின் சக்தித் துறையில் தேசிய ரீதியில் நிர்ணயித்த பங்களிப்பு முன்னேற்றம் பற்றி அறிக்கையிடப்பட்டது. சாதாரண நிலையுடன் ஒப்பிடும் போது மின் சக்தித் துறையில் பச்சைவீட்டு வாயு எரிதகனக் குறைப்பு 25% வீதம் என்றளவில் காணப்படுகின்றது (நிபந்தனைகளுடன் கூடிய 5% வீதம் மற்றும் நிபந்தனைகளற்ற விதத்தில் 20%). 2021-2030 ஆம் ஆண்டில் மதிப்பிடப்பட்டுள்ள பச்சைவீட்டு வாயு எரிதகனத்தைக் குறைத்தல், நிபந்தனைகளற்ற விதத்தில் குறைப்பு 9,819,000 மெ. தொ.

ஆகவும், நிபந்தனைகளுடன் கூடிய குறைப்பு 39,274,000 மெ.தொ. ஆகவும் காணப்படுகின்றது) (முழுமையான எரிதகனக் குறைப்பு 49,093,000 மெ.தொ. அளவில் உள்ளது). இந்த இலக்கை அடைய மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி மூல மின் உற்பத்தியை அதிகரிக்க வேண்டும்.

2.1.9 ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி செயற்பாடுகள்

ஐக்கிய அமெரிக்காவின் உதவி நிகழ்ச்சித் திட்டத்தின் (USAAID) கீழ் இ.மி.ச. சபைக்கு 4.23 மில்லியன் அமெரிக்க டொலர்களும், இலங்கை தனியார் மின்சார நிறுவனத்திற்கு 1.9 மில்லியன் அமெரிக்க டொலர்களும் மற்றும் இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகார சபைக்கு 3.6 மில்லியன் அமெரிக்க டொலர்களும் என நிதி மானியம் அடங்கலாக தொழில் நுட்ப உதவியை வழங்க உடன்பாடு எட்டப்பட்டுள்ளது. இந்தக் கருத் திட்டம் இலங்கை சக்தி நிகழ்ச்சித் திட்டம் என அழைக்கப்படுகின்றது. தேர்ந்தெடுத்த ஆராய்ச்சி மற்றும் அபிவிருத்தி சார்ந்த செயற்பாடுகளுக்கு இதன் மூலம் தொழில் நுட்ப உதவி கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகிறது.

2.1.10 மின்சாரக் கட்டணங்கள் திருத்தம் - 2024

இலங்கை அரசாங்கம் மின் வலு சக்தி அமைச்சின் ஊடாக 2023-01-12 ஆம் திகதிய MOPE/SEC/COM/2023 ஆம் இலக்கக் கடிதத்தின் மூலம் மின் சக்தித் துறைக்கான பொதுவான கொள்கை வழிகாட்டல்களை வெளியிட்டது. அதன்படி திட்டமிட்ட மின்வெட்டுகள் ஏற்படாத சூழல் மற்றும் அரசின் உதவியின்றி செயற்படக் கூடிய சூழல் உருவாகும் வகையில், மின் கட்டணத்தை அரையாண்டு அல்லது ஜனவரி முதலாம் திகதி மற்றும் ஜூலை முதலாம் திகதி ஆகிய திகதிகளில் திருத்த வேண்டும்.

.

2023ஆம் ஆண்டின் முதல் அரைப்பகுதி 2024 ஆம் ஆண்டில் கட்டணத் திருத்தத்திற்கு 10 ஆண்டுகளுக்குப் பின்னர் ஒரு ஆகுசெலவு-பிரதிபலிப்பு கட்டண முறை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இதன் படி 2024.07.16 ஆம் திகதி மின்சார திருத்தக் கட்டணம் அறிமுகப்படுத்தப்பட்டதுடன் சராசரியாக 22.5% கட்டணம் கறைக்கப்பட்டது. இதன் மூலம் நாட்டில் இருபத்தி நான்கு மணி நேரமும் தடையில்லா மின்சார விநியோகத்தை உறுதிசெய்து அதனால் நாட்டின் பொருளாதாரத்தை புத்துயிர்ப்பிக்க வாய்ப்புகள் கிடைக்கும். இதனால் தொழில்களும், வணிகங்களும் பல நன்மைகளை அடைந்துள்ளதுடன், பொதுமக்களும், முதலீட்டாளர் சமூகமும், எதிர்கால மின்சார நுகர்வோரும், தொடர்புடைய தரப்பினரும் பல நன்மைகளை அடைந்துள்ளனர்.

2.1.11 நவீன தொழில் நுட்பத்தின் மூலம் அடைந்த செயற்பாட்டு முன்னேற்றங்கள்

- **சூரிய சக்திப் பலகை மின் உற்பத்தி முறைமைக்கான தேசிய சக்தி எதிர்வுகூறல் மாதிரி**

ஒரு நம்பகமான மற்றும் துல்லியமான சக்தி எதிர்வுகூறல் முறைமையை உருவாக்கும் நோக்கத்துடன் சூரிய சக்தி மின் உற்பத்திப் பலைக்கான தேசிய சக்தி எதிர்வுகூறல்

முறைமை உருவாக்கப்பட்டுள்ளது. தற்போது, இந்த CEB Assist சக்தி எதிர்வுகூறல் முறைமை அனைத்து தரையில் பொருத்தப்பட்டுள்ள சூரிய சக்தி மின் உற்பத்திப் பலகை முறைமைகளுக்கும் சோதனை அளவில் செயற்படுத்தப்படுகின்றது.

- **கூரையின் மேல் நிறுவி மின்சாரத்தை உற்பத்தி செய்யக் கூடிய சூரிய சக்தி மின் உற்பத்திப் பலகை முறைமை இணைப்பு முன்னேற்றம் பற்றிய விபரங்கள்**

வீடுகள், சமயவழிபாட்டுத் ஸ்தலங்கள், ஹோட்டல்கள், வர்த்தக நிறுவனங்கள் மற்றும் தொழிற்சாலைகள் என்பவற்றின் கூரைகளின் மேல் நிறுவி மின்சாரத்தை உற்பத்தி செய்யக் கூடிய மின் உற்பத்திப் பலகை முறைமைகளை ஊக்குவிக்கும் முன்னெடுப்புகளும் நிலைபெறுதகு சக்தி அதிகார சபை, இலங்கை மின்சார சபை, இலங்கை மின்சார தனியார் நிறுவனம் ஆகியவற்றினால் தொடர்ந்து பின்பற்றப் படும்.

- **கூரையின் மேல் நிறுவி மின்சாரத்தை உற்பத்தி செய்யக் கூடிய சூரிய சக்தி மின் உற்பத்திப் பலகை உள்ளீடுகளை CEBAssist செயலாக்க முறைமையினுள் ஒன்றிணைத்தல்**

CEBAssist மூலம் சமீபத்தில் கூரையன் மேல் நிறுவி மின்சாரத்தை உற்பத்தி செய்யக் கூடிய சூரிய சக்தி மின் உற்பத்திப் பலகை முறைமை என்ற புதிய ஒரு முறைமை அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. இந்த ஒன்றிணைப்பின் மூலம் மின்சாரப் பகிர்ந்தளிப்பு ஊழியர்களுக்கு சூரிய சக்திப் பலகை முறைமைகளுக்கான அனுமதி கோரிக்கைகள், மின்சார இணைப்பு உள்ளீடுகள், உள்ளகக் கரும விடயங்கள் மற்றும் கள ஆய்வு நடவடிக்கைகள் போன்ற பல வகையான பணிகளை வினைத் திறன் வாய்ந்ததாக மேற்கொள்ள தேவையான வலிமை கிடைக்கும்.

கூரையின் மேல் நிறுவி மின்சாரத்தை உற்பத்தி செய்யக் கூடிய சூரிய சக்தி மின் உற்பத்தி உள்ளீடுகளின் முகாமைத்துவத்தில் நியமமான ஒரு அணுகுபிரவேசத்தை வழங்குகின்ற இந்த மொடியூல் எல்லாத் துறைகளிலும் முழுமையாக வெற்றிகரமாக நிர்மாணிக்கப்பட்டு செயற்படுத்தப்பட்டுள்ளது. நுகர்வோருக்கு தமது உள்ளீடுகளின் நிலை தொடர்பான இற்றைப்படுத்திய இயல்பான விபரங்களை பெற்றுக் கொடுக்கக் கூடிய வகையில் இந்த மொடியூலின் ஊடாக, கூரையின் மேல் நிறுவி மின்சாரத்தை உற்பத்தி செய்யக் கூடிய சகல சூரிய சக்தி மின் உற்பத்திப் பலகை முறைமைகளின் உள்ளீடுகள் அனைத்தும் முகாமை செய்யப்படுகின்றன.

- **தானியக்க தகவல் தொழில் நுட்ப சேவை**

தகவல் தொழில் நுட்பப் பிரிவு வழங்கும் சேவைகளின் தரத்தை மேம்படுத்தும் வகையில்ூ இ.மி.ச உள்ளக வாடிக்கையாளர்களுக்காக புதிதாக உருவாக்கிய தகவல் தொழில் நுட்ப சேவை மென்பாகம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.

2022 ஆண்டுக்கான வருடாந்த அறிக்கையில் முன்னிலைப்படுத்தப்பட்ட மேற்கூறிய செயற்பாட்டு மேம்பாடுகளுக்கு மேலதிகமாகூ CEBAssist தீர்வுத் திட்டத்தின் கீழ் பின்வரும் மொடியூல் உருவாக்கப்பட்டுள்ளது.

- அனைத்து மரபுசாரா மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி (NCRE) மின் உற்பத்தி நிலையங்களுக்கான நிகழ்நேர உருவாக்க புள்ளிவிவர வினவல் சேவைக்காக மரபுசாரா மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி மொடியூல் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது. மரபுசாரா மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி மின் உற்பத்தி நிலையங்களின் நிலையான மின் வாசிப்பு வசதியின் ஊடாக இந்த மொடியூலினால் உற்பத்தி புள்ளி விபரம் கண்காணிக்கப்பட்டு அவதானிக்கப்படும்.
- பிரதானமாக நீர் மற்றும் அனல் மின் உற்பத்தி நிலையங்களில் இருந்து நாளாந்த மின் உற்பத்தி, நீர்த்தேக்கங்கள், எரிபொருள் நிலை முதலியன போன்ற விவரங்கள் ஆன்லைனில் சேகரிக்கப்படுவதற்காக வடிவமைக்கப்பட்டுள்ள நாளாந்த மின் உற்பத்தி புள்ளி விபர மொடியூல்.
- மின் உற்பத்தி நிலையங்களினதும் அவற்றின் பிரிவுகளினதும் வேலைமாற்று பதவியிணியின் வேலைமாற்றுப் பணிகள் பட்டியல், குழு, லீவு மற்றும் வருகைக் குறிப்புகள் என்பவற்றை முகாமை செய்ய தயாரிக்கப்பட்டுள்ள வருகைப் பதிவு மொடியூல்.
- ஒவ்வொரு சம்பள வகுதிக்கும் உரிய செலவுப் பட்டியல், சம்பள அட்டைகள், நிதி ஒதுக்கீடு மற்றும் காசோலை என்பவற்றை அவதானித்து கண்காணிப்பதற்காக தயாரிக்கப்பட்டுள்ள செலவு விசாரணை மொடியூல்.
- அச்சீட்டு மின் கட்டணப் பட்டியலை விநியோகிக்கும் முறையியலுக்கு பதிலாக சகல வழமையான வாடிக்கையாளர்களுக்கு மின்னஞ்சல், குறுங்செய்தி ஆகியவற்றின் மூலமான இலத்திரனியல் மின் கட்டண சேவை.

2.1.12 சர்வதேச கூட்டுறவுகள்

- சட்டமா அதிபர் திணைக்களத்தினதும் அமைச்சரவையினதும் அனுமதியின் பின்னர் இலங்கை மின்சார சபைக்கும் ஜப்பான் மின்சார தகவல் நிலையத்திற்கும் (JEPIC) இடையில் தொழில் நுட்ப பரிமாற்றம் தொடர்பான புரிந்துணர்வு ஒப்பந்தம் (MOU) கைச்சாத்திடப்பட்டது.
- வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் வழிகாட்டலில் தெற்காசிய பிராந்திய கூட்டுறவு அமைப்பின் (SAARC) மின் வலு சக்தி நிலையத்தின் உறுப்புரிமை பெற்றுக் கொள்வதற்கு தேவையான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டன.
- வெளிநாட்டு அலுவல்கள் அமைச்சின் வழிகாட்டலில் வளைகுடா நாடுகளின் பல துறை தொழில் நுட்ப மற்றும் பொருளாதார கூட்டுறவுக்கான (BIMSTEC) ஒன்றியத்துடனான பல துறை தொழில் நுட்ப மற்றும் பொருளாதார கூட்டுறவு அமைப்புக்கான இணைந்த ஒன்றிய அமைப்பினது நிருவாக சபையின் முதலாவது கூட்டத்திலும் மின்சார வலையமைப்பு உள்ளக இணைப்புகளின் இரண்டாவது கூட்டத்திலும் பங்குபற்றி உரிய செயற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டன.
- வளைகுடா நாடுகளின் பல துறை தொழில் நுட்ப மற்றும் பொருளாதார கூட்டுறவு ஒன்றிய அமைப்பின் கொள்கை (BIMSTEC) ஆவணத்தில் மின்சாரப் பகிர்ந்தளிப்பு, மின்சார விற்பனை மற்றும் மின்சாரப் பரிமாற்றல் மற்றும் விலைகள் நிர்ணயம் என்பன தொடர்பான மீளாய்வு சமர்ப்பிக்கப்பட்டது.

2.1.13 2025 ஆம் ஆண்டிற்கான எதிர்காலத் திட்டங்களும் மற்றும் நிகழ்ச்சித் திட்டங்களும்

வரவு செலவுத் திட்டத்தின் மூலம் ஒதுக்கப்பட்டுள்ள நிதி -2025

அட்டவணை 2.1.13

வரவு செலவுத் திட்டத்தின் மூலம் ஒதுக்கப்பட்டுள்ள நிதி - 2025

	உப கருத் திட்டம்	விடயம்	விபரம்	2025 (மில்.ரூ.) ஒதுக்கீடு				மொத்தம் (மில்.ரூ.)
				11	12	13	17	
1.	032	2506	.மி.ச. சார்பாக பெற்ற கடன் ஒதுக்கீட்டுக் கணக்கீடு		7,676			7,676
2.	033	2202	கொழும்பு கழிவுகளிலிருந்து மினசாரத்தை உற்பத்தி செய்தல்	1,204				1,204
3.	034	2401	மின்வலு சக்தித் துறைக்கான அபிவிருத்தி திறன் திட்டத்திற்கான பெருந் திட்ட அமுல்படுத்தல் திட்டம் (JICA)			0.5	0.1	0.6
4.	035	2103	கொரிய நிதி உதவியின் கீழான மின் கலன் சக்தி முறைமையின் தாபிப்பு			0.8	0.1	0.9
5.	036	2103	அரசாங்கத்தின் கட்டிடங்கள், குறைந்த வருமானம் உடையவர்களுக்கான வீடுகள் மற்றும் சமய வழிபாட்டு ஸ்தலங்கள் என்பவற்றின் கூரைகளின் மேல் நிறுவி மின்சாரத்தை உற்பத்தி செய்யக் கூடிய மின் சக்தி உற்பத்திப் பலகை முறைமைகள் நிறுவும் கருத் திட்டம் (GOSL/India)			240	50	290
6.	037	2103	சிறிய தீவுகளில் கலப்பு மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி மின் உற்பத்தி முறைமை நிர்மாணம் - நெடுந்தீவு, அனலதீவு, நயினாதீவு			2600	400	3000
7.	038	2401	இலங்கை மின்சார நிகழ்ச்சித் திட்டம் - USASID			280	17	297
8.	042	2103	SLAEB இன் ஆற்றல் வியாபிப்பு			125	38	163
9.	043	2103	IAEA மூலம் கிடைத்த மானியம்			25	7	32
10.	045	2302	கெரவலப்பிட்டிய - துறைமுகம் 2வது மின்பரிமாற்றல் பாதை திட்டம்		7000			
11.	048	2302	புதிய ஹபரன கப்பல்துறை மின்பரிமாற்றல் அபிவிருத்தி திட்டம் CEATP 1 (AIIB)		1			
12.	049	2302	சம்பூர் கப்பல்துறை மின்பரிமாற்றல் அபிவிருத்தி திட்டங்கள் (AIIB)		1			
13.	001	1503	இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகார சபை					140
		1509						15
14.	002	1503	இலங்கை அணு சக்தி சபை					50
15.	004	1503	இலங்கை அணு சக்தி ஒழுங்குறுத்துகை சபை					45
		1509						20
16.	015	1503	தேசிய மின்சார ஆலோசனைச் சபை					22
		1509						36

17.	015	1503	மின்சாரத்துறை சீர்திருத்தங்களுக்கான செயலகத்தை நிறுவுதல்					8
		1509						50
18.	015	2201	தேசிய மின்சார ஆலோசனைச் சபை	50.5		0.3	0.2	51
19.	016	2507	அணுசக்தி ஆய்வு மற்றும் திட்டமிடல் மின்சார உற்பத்திக்கான திட்டம் (AEB)					2.5
20.	017	2201	மின்சாரத்துறை சீர்திருத்தங்களுக்கான செயலகத்தை நிறுவுதல்					50

மூலம்:- வரவு செலவுத் திட்ட மதிப்பீடு-2025

- **மின் உற்பத்தி விரிவாக்கல் கருத் திட்டம்**

நீண்டகால மின் உற்பத்தித் திட்டம் (2023-2042) அனுமதியின் நிமித்தம் 2022-09-14 ஆம் திகதி இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவுக்கு சமர்ப்பிக்கப்பட்டது. அந்தத் திட்டத்திற்கு 2023-02-10 ஆம் திகதி இலங்கைப் பொதுப் பயன்பாடுகள் ஆணைக்குழுவின் அனுமதி கிடைத்தது. அதன்படி, இ.மி.ச. நீண்டகால மின் உற்பத்தித் திட்டத்தினுள் (2023-2042) திட்டமிடப்பட்டுள்ளவாறு புதிய மின் உற்பத்திக் கருத் திட்டங்களை செயற்படுத்தும் பணிகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன.

இ.மி.ச. நீண்டகால மின் உற்பத்தித் திட்டத்தின் (2023-2042) பிரகாரம், 2024 ஆம் ஆண்டு முதல் 2026 ஆம் ஆண்டு வரை மின்சார முறைமையினுள் பின்வரும் மின் உற்பத்தி நிலையங்களை இணைக்க திட்டமிடப்பட்டுள்ளது

அட்டவணை 2.1.14

நீண்டகால மின் உற்பத்தித் திட்டத்தின் (2023-2042) பிரகாரம் 2024 ஆம் ஆண்டு முதல் 2026 ஆம் ஆண்டு வரை மின்சார முறைமையினுள் மின் உற்பத்தி நிலையங்களை இணைக்க திட்டமிடப்பட்டுள்ள மின் உற்பத்தி நிலையங்கள் பற்றிய விபரங்கள்

	மின் உற்பத்தி நிலையத் தொழில் நுட்பம்	சக்திக் கொள்திறன் அளவு (மெ.வொ.)
01	மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி (பிரதானமாக நீர்வலு, சிறிய நீர்வலு, சூரிய சக்தி, காற்று சக்தி, தாவர சக்தி மற்றும் உயிரணுத் திணிவு சக்தி)	2,199
02	சுயாதீன மின்கல மின் சக்திக் களஞ்சிய வசதி	100
03	முழுமையான வசதிகளுடன் கூடிய வலைமையப்பாக்கிய சூரிய சக்திப் பலகை முறைமை (மின் கலன் மின் சக்திக் களஞ்சிய வசதியுடன் கூடிய)	200
04	இயற்கை எரிவாயு மற்றும் இயற்கை எரிவாயு ஒன்றிணைந்த சுழற்சி சக்தி மின் உற்பத்திப் பொறித் தொகுதி	665
05	புதிய எரிவாயு டேர்பைன்	130
	மொத்தம்	**3,294**

மூலம்: 2024 செயலாற்றுகை அறிக்கை - இ.மி.ச.

2.2 வலுசக்தி பிரிவின் செயற்பாடுகள்

மக்களின் தேவைகள் நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றன, மேலும் அத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு அவசியமான காரணிகளில், பெற்றோலியம் பிரதான இடத்தைப் பிடித்துள்ளது. எனவே, வலுசக்தி அமைச்சகத்தின் கீழ் உள்ள வலுசக்தி பிரிவு, நாட்டின் பெற்றோலியத் தேவைகளைப் பூர்த்தி செய்வதற்கு வினைத்திறன்மிக்க சேவையை வழங்குவதையும், நுகர்வோர், மற்றும் பிற பங்குதாரர்களுக்கு சேவை செய்வதை நோக்கமாகக் கொண்ட தேவையான கொள்கைகள் குறித்த வழிகாட்டுதலை வழங்குவதையும் நோக்கமாகக் கொண்டுள்ளது, இது 2024 ஆம் ஆண்டில் செயற்படுத்தபடுத்தப்பட உள்ளது.

இதற்கிணங்க, இப் பிரிவு, 2024 ஆம் ஆண்டில் உலகளாவிய எரிபொருள் விலை போக்குகள் மற்றும் இலங்கையில் எரிபொருள் விலையில் அவற்றின் தாக்கம், உள்நாட்டு எரிபொருள் தேவையைப் பூர்த்தி செய்வதற்கு வழங்கப்பட்ட பங்களிப்பு, பெற்றோலியத் தொழிற்துறையை ஒழுங்குபடுத்துவதற்காக பெறப்பட்ட நடவடிக்கைகள் மற்றும் பெற்றோலியத் தொழிற்துறையில் உட்கட்டமைப்பு அபிவிருத்திக்காக அமைச்சு எடுத்த நடவடிக்கைகள் தொடர்பான செயற்பாடுகள் ஆகியவற்றை முன்வைக்கிறது.

2.2.1 2024 ஆம் அண்டின் வலுசக்திப் (பெற்றோலியம்) பிரிவு ஒரு பார்வை

மொத்த இறக்குமதிசெய்யப்பட்ட சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலிய பொருட்கள்	3,188,771 மெ.தொ
மொத்த இறக்குமதிசெய்யப்பட்ட மசகு எண்ணெய்	1,519,284 மெ.தொ
சப்புகஸ்கந்தை சுத்திகரிப்பு நிலையத்தின் உற்பத்தி	1,294,963 மெ.தொ
இறக்குமதிசெய்யப்பட்ட பெற்றோலிய பொருட்களின் மொத்த செலவினம்	USD 3,263.562 மில்லியன்
பெற்றோலிய பொருட்களின் மொத்த விற்பனை	4,470,060 மெ.தொ
செயற்பாட்டு நிலையிலுள்ள எரிபொருள் நிரப்பு நிலையங்களின் எண்ணிக்கை	1,535
இ.பெ.க.மு த்தின் பெற்றோலிய களஞ்சியத் திறன்	440,147 மெ.தொ

2.2.2 உலகளாவிய பெற்றோலியப் போக்குகள் இலங்கையின் எரிபொருள் விலையில் ஏற்படுத்தும் தாக்கம்

i. சர்வதேச பெற்றோலிய விலைகளின் போக்குகள்

சர்வதேச எரிபொருள் விலைகள் உள்நாட்டு எரிபொருள் விலைகளில் நேரடி தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. 2024 ஆம் ஆண்டில், ஆசிய பசிபிக் பிராந்தியத்தில் மசகு எண்ணெய் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட எரிபொருள் விலைகளில் பின்வரும் போக்குகள் காணப்பட்டன.

அட்டவணை 2.2.1
ஆசிய-பசிபிக் மசகு எண்ணெய் மற்றும் சுத்திகரிக்கப்பட்ட பொருட்களின் வெளியிடப்பட்ட விலைகள் - 2024

மாதம்	பரல் ஒன்றிற்கான விலை (USD)				
	பெற்றோல் 92 ஒக்டேன்	பெற்றோல் 95 ஒக்டேன	சுப்பர் டீசல்	ஓடோ டீசல்	மசகு எண்ணெய்
ஜனவரி	91.195	95.978	102.832	101.162	83.32
பெப்ரவரி	95.591	100.161	106.523	104.983	77.68
மார்ச்	97.142	101.440	103.859	102.875	79.06
ஏப்ரல்	102.126	106.472	104.705	103.522	80.99
மே	91.130	95.498	97.318	95.753	84.52
யூன்	87.935	93.078	98.085	97.642	89.14
யூலை	92.134	96.541	99.303	98.994	83.93
ஆகஸ்ட்	84.702	88.938	92.214	90.692	82.52
செப்ரெம்பர்	78.448	82.858	84.329	83.358	83.80
ஒக்ரோபர்	79.755	85.932	87.915	87.426	77.94
நவம்பர்	79.088	84.509	89.230	89.098	73.41
டிசம்பர்	81.352	84.640	88.473	88.905	74.87

மூலம் : S&P global commodity insights

2024 ஆம் ஆண்டில் சிங்கப்பூர் பிளாட் விலைகளைக் கவனத்தில் எடுத்து,

- யூன் மாதத்தில் பரல் ஒன்றிற்கான மசகு எண்ணெயின் அதிகபட்ச விலை USD 89.14 ஆகவும், நவம்பரில் குறைந்தபட்ச விலை USD 73.41 ஆகவும் பதிவாகியுள்ளது. அதே நேரத்தில் பரல் ஒன்றிற்கான மசகு எண்ணெயின் பொதுவான விலை USD 80.93 ஆக அடையாளம் காணப்பட்டுள்ளது.

- ஏப்ரல் மாதத்தில் ஒரு பெற்றோல் ஒக்டேன் 92 பரல் ஒன்றிற்கான அதிகபட்ச விலை USD 102.23 ஆகவும், குறைந்தபட்ச விலை செப்ரெம்பரில் USD 78.45 ஆகவும் பதிவாகியுள்ளது. அதே நேரத்தில், பெற்றோல் ஒக்டேன் 92 பரல் ஒன்றிற்கான பொதுவான விலை USD 88.38 ஆக அடையாளம் காணப்பட்டுள்ளது.

- ஏப்ரல் மாதத்தில் பெற்றோல் ஒக்டேன் 95 பரல் ஒன்றிற்கான அதிகபட்ச விலை USD 106.47 ஆகவும், குறைந்தபட்ச விலை செப்ரெம்பரில் USD 8 ஆகவும் பதிவாகியுள்ள அதேநேரத்தில், பெற்றோல் ஒக்டேன் 95 பரல் ஒன்றிற்கான பொதுவான விலை USD 93 ஆகவும் பதிவாகியுள்ளது.

- பெப்ரவரி மாதத்தில் ஓட்டோ டீசல் பரல் ஒன்றிற்கான அதிகபட்ச விலை USD 106.52 ஆகவும், குறைந்தபட்ச விலை செபரெம்பரில் USD 84.33 ஆகவும் பதிவாகியுள்ளது. அதேநேரத்தில், ஓட்டோ டீசல பரல் ஒன்றிற்கான பொதுவான விலை USD 96.23 ஆக அடையாளம் காணப்பட்டுள்ளது.

- பெப்ரவரி மாதத்தில் சுப்பர் டீசல் பரல் ஒன்றிற்கான அதிகபட்ச விலை USD 104.98 ஆகவும், குறைந்தபட்ச விலை செப்ரெம்பரில் USD 83.36 ஆகவும் பதிவாகியுள்ளது. அதே நேரத்தில் சுப்பர் டீசல் பரல் ஒன்றிற்கான பொதுவான விலை USD 95.36 ஆக அடையாளம் காணப்பட்டுள்ளது.

ii. இலங்கையில் எரிபொருள் விலையில் உலகளாவிய விலைகளின் தாக்கம்

இலங்கை முழுமையாக இறக்குமதி செய்யப்படும் பெற்றோலியப் பொருட்களைச் சார்ந்து இருப்பதால், சர்வதேச எரிபொருள் விலைகள் உள்நாட்டு எரிபொருள் விலைகளில் நேரடி தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. பெற்றோல் ஒக்டேன் 92 மற்றும் ஓட்டோ டீசல் ஆகியவற்றின் நாளாந்த விற்பனை அதிகமாக காணப்படுவதால், உலகளாவிய எரிபொருள் விலையில் ஏற்படும் ஏற்ற இறக்கங்கள் உள்நாட்டு எரிபொருள் விலைகளில் நேரடி தாக்கத்தை ஏற்படுத்துகின்றன. எவ்வாறாயினும், பெற்றோல் ஒக்டேன் 95 மற்றும் சுப்பர் டீசலின் நாளாந்த விற்பனை மிகக் குறைவாக காணப்படுவதால், சர்வதேச விலையில் ஏற்படும் மாற்றம் உள்நாட்டு விலையையில் எதுவித தாக்கத்தையும் ஏற்படுத்தாது.

2.2.3 2024 ஆம் ஆண்டில் உள்நாட்டு பெற்றோலிய விநியோகத்திற்கான பங்களிப்பு

i. பெற்றோலியப் பொருட்களின் இறக்குமதி மற்றும் விற்பனை

பொருளாதார நெருக்கடிகளுக்கு பின்னர் பொருளாதார செயற்பாடுகள் மீளெழுச்சி பெறத் தொடங்கியதிலிருந்து, அந்நியச் செலாவணி நெருக்கடிகள் சற்று தளர்வடைந்ததனால், 2024 ஆம் ஆண்டில் பெற்றோலியப் பொருட்களின் இறக்குமதிகள் முனபு போல் இடம்பெறத் தொடங்கியுள்ளது. இதற்கிணங்க, 2024 ஆம் ஆண்டில் உள்நாட்டு பெற்றோலியத் தேவைகளை பூர்த்தி செய்வதற்காக, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் உள்ளடங்கலாக ஐந்து (05) பிரதான வழங்குனர்களால் 4,708,055 மெற்றிக் தொன் மசகு எண்ணெய் உள்ளடங்கலாக 08 பெற்றோலியப் பொருட்கள் USD 3,263.562 மில்லியன் செலவின் இறக்குமதி செய்யப்பட்டதோடு இதற்காக பெருந்தொகை பணம் செலவிடப்பட்டமையும் குறிப்பிடத்தக்கதாகும்.

அட்டவணை 2.2.2
இறக்குமதி செய்யப்பட்ட பெற்றோலியப் பொருட்கள் - 2024

உற்பத்திகள்	தொகை (மெ.தொ)					மொத்தம்
	இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம	லங்கா இந்தியன் ஒயில் கம்பனி	சினோபக்	ஆர்.எம். பார்க்	யுனைட்டெட் பெற்றோலியம் லிமிட்டெட்	
மசகு எண்ணெய்	1,519,284	-	-	-	-	**1,519,284**
லங்கா ஓடோ டீசல்	507,054	286,197	151,884	104,270	15,137	**1,064,542**
லங்கா சுப்பர் டீசல்	26,945	11,140	6,067	6,283	2,958	**53,393**
பெற்றோல் 92 ஒக்டேன்	585,708	269,701	149,277	100,070	15,059	**1,119,815**
பெற்றோல் 95 ஒக்டேன்	19,540	12,570	5,133	5,926	2,937	**46,106**
ஜெட் A 1	315,811	-	-	-	-	**315,811**
குறை சல்பர் உலை எண்ணெய் (180 CST)	35,468	332,900	186,199	-	-	**554,567**
கப்பல்களுக்கான எரிபொருள்	-	34,537	-	-	-	**34,537**
மொத்தம்	**3,049,576**	**947,045**	**498,560**	**216,549**	**36,091**	**4,708,055**

Source: CPC, LIOC, SINOPEC, R.M.PARK, UNITED PETROLEUM

அட்டவணை 2.2.3
பெற்றோலியப் பொருட்களுக்கான இறக்குமதி செலவினம் - 2024

உற்பத்திகள்	இறக்குமதி செலவினம் (USD மில்லியன்.)					மொத்தம்
	இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம	லங்கா இந்தியன் ஒயில் கம்பனி	சினோபக்	ஆர்.எம். பார்க்	யுனைட்டெட் பெற்றோலியம் லிமிட்டெட்	
மசகு எண்ணெய்	981.140	-	-	-	-	**981.140**
லங்கா ஓடோ டீசல்	381.099	213.325	114.96	75.577	11.334	**796.295**
லங்கா சுப்பர் டீசல்	19.805	8.366	4.75	4.839	2.227	**39.987**
பெற்றோல் 92 ஒக்டேன்	470.652	216.917	124.484	77.981	12.322	**902.356**
பெற்றோல் 95 ஒக்டேன்	16.706	10.538	4.311	5.136	2.518	**39.209**
ஜெட் A - 1	245.417	-	-	-	-	**245.417**
குறை சல்பர் உலை எண்ணெய் (180 CST)	21.293	211.892	-	-	-	**233.185**
கப்பல் உலை எண்ணெய்	-	25.973	-	-	-	**25.973**
மொத்தம்	2,137.701	687.011	248.505	163.533	28.401	**3,263.562**

மூலம்: CPC, LIOC, SINOPEC, R.M.PARK, UNITED PETROLEUM

ii. பெற்றோலியப் பொருட்களின் விற்பனைகள்

போக்குவரத்து, மின்சாரம், கைத்தொழில், விவசாயம், மீன்பிடி போன்ற தேசிய பொருளாதாரத்தின் அனைத்துத் தொழிற்துறைகளின் செயற்பாடுகளும் பெற்றோலியப் பொருட்களின் விநியோகத்தைச் சார்ந்து இருப்பதால், அத் தொழிற்துறைகளின் சீரான செயற்பாட்டின் தேவைக்கு ஏற்ற எரிபொருள் விநியோகத்தைப் பராமரிப்பது அவசியமானதாகும். இதற்கிணங்க, 2024 ஆம் ஆண்டில் பெற்றோலியப் பொருட்களின் விற்பனையில் ஒவ்வொரு எரிபொருள் வழங்குனரின் பங்களிப்பையும் பின்வரும் அட்டவணை காட்டுகிறது. 2024 ஆம் ஆண்டில் மொத்த பெற்றோலிய பொருட்களின் விற்பனை 4,470,063 மெற்றிக் தொன் ஆகும்.

அட்டவணை 2.2.4

பெற்றோலியப் பொருட்களின் விற்பனை- 2024

உற்பத்திகள்	மொத்த விற்பனை (USD மில்லியன்)					மொத்தம்
	இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்	லங்கா இந்தியன் ஓயில் கம்பனி	சினோபக்	ஆர்.எம். பார்க்	யுனைட்டெட் பெற்றோலியம் லிமிட்டெட்	
பெற்றோல் 92 ஒக்டேன்	804,419	253,821	157,631	81,710	17,064	**1,314,645**
பெற்றோல் 95 ஒக்டேன்	20,893	14,583	4,355	2,974	632	**43,437**
லங்கா ஓடோ டீசல	1,025,160	279,474	170,385	82,395	14,760	**1,572,174**
லங்கா சுப்பர் டீசல்	23,531	9,621	5,482	3,880	707	**43,221**
லங்கா மண்ணெண்ணெய்	134,580	-	-	-	-	**134,580**
லங்கா கைத்தொழில் மண்ணெண்ணெய்	4,134	-	-	-	-	**4,134**
லங்கா இரசாயன நெப்தா	101,541	-	-	-	-	**101,541**
லங்கா உலை எண்ணெய் 800	6	-	-	-	-	**6**
லங்கா உலை எண்ணெய் 1500 உயர் சல்பர்	116,652	-	-	-	-	**116,652**
லங்கா உலை எண்ணெய் 1500 குறை சல்பர்	155,816	306,262	-	-	-	**462,078**
லங்கா உலை எண்ணெய – சுப்பர்	155,857	-	-	-	-	**155,857**
ஜெட் A-1	468,158	-	-	-	-	**468,158**
லங்கா சோல்வன் (SBP)	1,161	-	-	-	-	**1,161**
திரவ பெற்றோலிய எரிவாயு	19,676	-	-	-	-	**19,676**
லங்கா AV வாயு	132	-	-	-	-	**132**
கப்பல் உலை எண்ணெய்	-	32,608	-	-	-	**32,608**
மொத்தம்	**3,031,716**	**896,372**	**337,853**	**170,959**	**33,163**	**4,470,063**

மூலம்: CPC, LIOC, SINOPEC, R.M.PARK, UNITED PETROLEUM

விமான எரிபொருள் விற்பனை (Jet A-1)

இலங்கையில் விமான எரிபொருளின் தனியுரிமை வழங்குனர் என்ற வகையில், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் தேசிய பொருளாதாரத்தில் பிரதான பங்கேற்பாளராக மாறியுள்ளது. இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் விமான எரிபொருள் பிரிவு, பண்டாரநாயக்க சர்வதேச விமான நிலையம் (BIA), மத்தள ராஜபக்ஷ சர்வதேச விமான நிலையம் (MIA), இரத்மலானை விமான நிலையம் மற்றும் பலாலி விமான நிலையம் ஆகிய நான்கு விமான நிலையங்களுக்கும் அதன் சேவைகளை வழங்குகிறது.

2024 ஆம் ஆண்டில், மொத்த விமான எரிபொருள் விற்பனை 468,158 மெற்றிக் தொன்னாக பதிவு செய்யப்பட்டுள்ளது, மேலும் நாளொன்றுக்கு சராசரிக் கேள்வியாக 1,283 மெற்றிக் தொன் உள்ளது. 2023 உடன் ஒப்பிடும்போது, 2024 இல் 24% அதிகரிப்பு காட்டப்பட்டுள்ளது. 2021-2024 ஆம் ஆண்டில் விமான எரிபொருள் விற்பனை குறித்த விவரங்களை பின்வரும் அட்டவணை காட்டுகிறது.

அட்டவணை 2.2.5

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் விற்பனை செய்யப்பட்ட ஜெட் A-1

(2021 – 2024)

ஆண்டு	தொகை (மெ.தொ)
2021	223,854
2022	245,838
2023	377,608
2024	468,158

மூலம்: இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

உராய்வுநீக்கி எண்ணெய்

உராய்வுநீக்கி எண்ணெய் தொழிற்துறை என்பது கைத்தொழிற்துறையில் மிகவும் போட்டித்தன்மை வாய்ந்த மற்றும் மூலோபாய வணிகங்களில் ஒன்றாகும். இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் அதன் தயாரிப்புகளை Ceypetco என்ற வர்த்தக பெயரில் விற்பனை செய்கிறது மற்றும் அவர்களின் தயாரிப்புகள் சர்வதேச தரங்களுடன் வழங்கப்படுகின்றன. 2021 முதல் 2024 வரை இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் உராய்வுநீக்கி எண்ணெய் விற்பனை செய்யப்பட்ட தொகையை பின்வரும் அட்டவணை காட்டுகிறது. தரவுகளின்படி, முன்னைய ஆண்டுகளில் உராய்வுநீக்கி எண்ணெய் தொழிற்துறையில் குறிப்பிடத்தக்க சரிவுவை தெளிவாகக் காணக்கூடியதாக உள்ளதெனினும், 2024 இல் சந்தையில் இவ் வர்த்தகம் மீளவும் மீளெழுச்சி பெற்று வருவதைக் காணலாம்.

அட்டவணை 2.2.6

உராய்வுநீக்கி எண்ணெய் விற்பனை - (2021 - 2024)

ஆண்டு	தொகை (கி.லீ)
2021	3,809
2022	901
2023	1,310
2024	1,538

மூலம்: இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

2.2.4 மசகு எண்ணெய் இறக்குமதி மற்றும் சுத்திகரிப்பு

சபுகஸ்கந்தை மசகு எண்ணெய் சுத்திகரிப்பு நிலையம் 1969 இல் நிறுவப்பட்டுள்ளதுடன், இதன் சுத்திகரிப்புத் திறன் நாளொன்றுக்கு 38,000 பரல் ஆகும். பின்னர், நாளொன்றுக்கான மசகு எண்ணெய் சுத்திகரிப்பு திறன் 50,000 பரலாக அதிகரிப்பதற்கு இவ் சுத்திகரிப்பு நிலையம் பல நவீனமயப்படுத்தலுக்கு உட்பட்டுள்ளது. தற்போது இவ் சுத்திகரிப்பு நிலையத்தின் மொத்த உற்பத்தி நாட்டின் வருடாந்த மொத்த பெற்றோலியக் கேள்வியின் 35% த்திற்கு மட்டுமே பங்களிப்பு செய்கின்றது. மேலும், இவ் சுத்திகரிப்பு நிலையத்தின் முடிவுப்பொருட்களாக பெற்றோல், ஓடோ டீசல், சுப்பர் டீசல், உலை எண்ணெய், மண்ணெண்ணெய், திரவ பெற்றோலிய எரிவாயு, ஜெட் A-1, தார், இரசாயன நெப்தா மற்றும் சோல்வன் என்பனவாகும்.

2019 தொடக்கம் 2024 ஆம் ஆண்டு வரையான காலப்பகுதியில் இறக்குமதி செய்யப்பட்ட மசகு எண்ணெயின் விபரங்கள் அட்டவணை 2.2.7 இலும் மற்றும் இக் காலப்பகுதியில் சுத்திகரிப்பு நிலையத்தால் உற்பத்திசெய்யப்பட்ட பெற்றோலியப் பொருட்களின் தொகையை அட்டவணை 2.2.8 இலும் விபரமாக தரப்பட்டுள்ளன.

அட்டவணை 2.2.7

ஆண்டு	தொகை(மெ.தொ)	இறக்குமதி பெறுமதி (ரூ.மிலிலியன்)
2019	1,843,000	172,542
2020	1,666,000	98,277
2021	1,130,000	101,306
2022	743,000	180,019
2023	1,666,000	364,098
2024	1,519,284	322,404

மூலம்: இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

2022 ஆம் ஆண்டில், 743,000 மெற்றிக் தொன் மசகு எண்ணெய் இறக்குமதி செய்யப்பட்டது, இது 2023 ஆம் ஆண்டில் 1,666,000 மெற்றிக் தொன்னாக அதிகரித்தது. இதற்கிணங்க, 2022 ஆம் ஆண்டுடன் ஒப்பிடும்போது, 2023 ஆம் ஆண்டில் மசகு எண்ணெய் இறக்குமதி 124% வளர்ச்சியை பதிவுசெய்துள்ளது. 2024 ஆம் ஆண்டில், மசகு எண்ணெய் இறக்குமதி மீண்டும் 1,519,284 மெற்றிக் தொன்னாக குறைந்துள்ளது.

அட்டவணை 2.2.8
இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் உள்நாட்டில் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியப் பொருட்கள (2019 - 2024)

உற்பத்திகள்	தொகை(மெ.தொ)					
	2019	2020	2021	2022	2023	2024
மசகு எண்ணெய் உள்ளீடு	1,902,357	1,685,441	1,272,207	529,773	1,677,033	1,543.836
பெற்றோல் 92 ஒக்டேன்	185,915	164,416	124,092	38,666	171,186	150,566
லங்கா ஓடோ டீசல்	624,462	537,645	370,594	128,165	505,675	443,933
லங்கா உலை எண்ணெய்	468,843	465,419	359,021	194,197	482,126	345,447
லங்கா உலை எண்ணெய் 800 Sec.	-	-	-	-	-	82,000

மண்ணெண்ணெய்	8,369	109,165	98,284	25,289	49,484	72,618
நெப்தா	162,019	156,953	106,956	30,835	129,058	121,449
தார்	17,103	13,561	6,879	-	-	-
திரவ பெற்றோலிய எரிவாயு	26,988	25,251	16,650	5,687	23,800	20,815
ஜெட் A-1	258,986	157,279	130,572	57,346	233,652	207,434
லங்கா சோல்வன் (SBP)	1,660	897	3,037	2,690	1,524	1,267
மொத்தம்	**1,754,345**	**1,630,586**	**1,216,085**	**482,875**	**1,596,505**	**1,294,963**

மூலம்: இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

2024 ஆம் ஆண்டில், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் 1,543.836 மெற்றிக் தொன் மசகு எண்ணெயைப் பயன்படுத்தி 1,294,964 மெற்றிக் தொன் பெற்றோலியத்தை சுத்திகரித்தது, இது இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் மொத்த சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியப் பொருட்களில் 44% ஆகும். 2024 ஆம் ஆண்டில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியப் பொருட்களின் இறக்குமதி தொகை மற்றும் உள்நாட்டில் சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியப் பொருட்களின் விபரங்கள் அட்டவணை 2.2.9 இல் விரிவாக தரப்பட்டுள்ளது.

அட்டவணை 2.2.9

இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் இறக்குமதி செய்யப்பட்ட சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியப் பொருட்கள் மற்றும் சுத்திகரிப்பு நிலைய உற்பத்திகள் -2024

உற்பத்திகள்	**இறக்குமதி செய்யப்பட்ட சுத்திகரிக்கப்பட்ட பெற்றோலியப் பொருட்கள் (மெ.தொ)**	**சுத்திகரிப்பு நிலைய உற்பத்திகள் (மெ.தொ)**	**மொத்தம் (மெ.தொ)**	**உள்நாட்டில் சுத்திகரிக்கப்பட்ட உற்பத்திகளின் %**
லங்கா ஓடோ டீசல்	507,378	443,933	991,311	47%
லங்கா சுப்பர் டீசல்	26,944	-	26,944	-
பெற்றோல் 92 ஒக்டேன்	585,708	150,665	736,274	20%
பெற்றோல் 95 ஒக்டேன்	19.540	-	19,540	-
மண்ணெண்ணெய்	-	72,618	72,618	100%
ஜெட் A-1	315,811	207,434	523,245	40%
நெப்தா	-	121,449	121,449	100%
திரவ பெற்றோலிய எரிவாயு	-	20,815	20,815	100%
சோல்வன் SBP	-	1,267	1,267	100%
உலை எண்ணெய் 800 சுப்பர்	-	345,447	345,447	100%
லங்கா உலை எண்ணெய் 800 கப்பல்களுக்கான எண்ணெய்	-	82,000	82,000	100%
லங்கா உலை எண்ணெய் 180	35,468	-	35,468	-
Total	**1,530,849**	**1,294,963**	**2,936,477**	**44%**

மூலம்: இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

எரிபொருள் களஞ்சியம்

வரையறுக்கப்பட்ட இலங்கை பெற்றோலிய களஞ்சிய முனையம், கொலன்னாவ மற்றும் முத்துராஜவெல ஆகிய இரண்டு முக்கிய முனையங்களிலும், 11 பிராந்திய மொத்த களஞ்சிய நிலையங்களிலும் எரிபொருள் களஞ்சிய வசதிகளை கொண்டுள்ளது. இதற்கிணங்க, நாட்டில் 224,649 மெற்றிக் தொன் எரிபொருள் களஞ்சியத் திறன் பராமரிக்கப்படுகிறது, கொலன்னாவ முனையத்தில் 202,358 மெற்றிக் தொன், முத்துராஜவெல முனையத்தில் 13,140 மெற்றிக் தொன் மற்றும் 11 பிராந்திய மொத்த களஞ்சிய நிலையங்கள் என மொத்தம் 440,147 மெற்றிக் தொன் எரிபொருள் களஞ்சியத் திறனைக் கொண்டுள்ளது. இதன்படி, இந்த இரண்டு பிரதான முனையங்கள் மற்றும் 11 பிராந்திய மொத்த களஞ்சிய நிலையங்கள் 2024 ஆம் ஆண்டில் எரிபொருள் களஞ்சியத்தில் தீவிர பங்களிப்பைச் செய்தன, மேலும் மொத்த எரிபொருள் களஞ்சியத் திறன் கீழே உள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

அட்டவணை 2.2.10
வரையறுக்கப்பட்ட இலங்கை பெற்றோலிய களஞ்சிய முனையத்தின் மொத்த எரிபொருள் களஞ்சியத் திறன்

உற்பத்திகள்	களஞ்சியத் திறன் (மெ.தொ)			மொத்தம்
	கொலன்னாவை முனையம்	முத்துராஜவல முனையம்	பிராந்திய மொத்தக் களஞ்சியம்	
Naphtha	11,996	-	-	11,996
பெற்றோல் 92 ஒக்டேன்	23,197	-	-	23,197
பெற்றோல் 95 ஒக்டேன்	59,321	83,857	3,346	146,524
மண்ணெண்ணெய்	9,813	-	680	10,493
ஜெட் A-1	9,484	-	-	9,484
ஓடோ டீசல்	46,074	118,501	9,114	173,689
சுப்பர் டீசல்	18,319	-	-	18,319
லங்கா உலை எண்ணெய்	44,575	-	-	44,575
சோல்வன்	341	-	-	341
கைத்தொழில் மண்ணெண்ணெய	1,529	-	-	1,529
மொத்தம்	**224,649**	**202,358**	**13,140**	**440,147**

மூலம்: வரையறுக்கப்பட்ட இலங்கை பெற்றோலிய களஞ்சிய முனையம்

எரிபொருள் விநியோகத்தர்கள்

2024 ஆம் ஆண்டுக்குள், ஐந்து எரிபொருள் விநியோக நிறுவனங்கள் எரிபொருள் விநியோக நடவடிக்கைகளில் ஈடுபடும், மேலும் வரையறுக்கப்பட்ட இலங்பை பெற்றோலிய களஞ்சிய முனையம் இந் நிறுவனங்களின் எரிபொருள் தேவைகளுக்கு ஏற்ப எரிபொருளை விநியோகிக்கும். வரையறுக்கப்பட்ட இலங்பை பெற்றோலிய களஞ்சிய முனையத்தின் இரண்டு பிரதான முனையங்களான கொலன்னாவ மற்றும் முத்துராஜவெல உள்ளடங்கலான பிராந்திய எரிபொருள் களஞ்சியசாரலகளிலிருந்தும் எரிபொருள் வழங்கும் நிறுவனங்களுக்கு எரிபொருள் விடுவிக்கப்படும், மேலும் 2024 ஆம் ஆண்டில் எரிபொருள் விநியோக நிறுவனங்களுக்கு எரிபொருள் விநியோகத்ததன் முன்னேற்றங்கள் கீழே உள்ள அட்டவணையில் காட்டப்பட்டுள்ளது.

இதற்கிணங்க, 2024 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட மொத்த எரிபொருள் விநியோகங்கள் 4,178,575 கிலோலீற்றர்கள் ஆகும், இதில் 3,159,547 கிலோலீற்றர்கள் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கும் , 318,331 கிலோலீற்றர்கள் லங்கா இந்தியன் ஒயில் கம்பெனிக்கும், 439,422 கிலோலீற்றர்கள் சினோபெக் கம்பெனிக்கும், 218,493 கிலோலீற்றர்கள் ஆர்.எம். பார்க் கம்பெனிக்கும் மற்றும் 42,781 கிலோலீற்றர்கள் யுனைடெட் பெற்றோலியம் கம்பெனிக்கும் உரித்தானவை ஆகும். இதற்கிணங்க, வரையறுக்கப்பட்ட இலங்பை பெற்றோலிய களஞ்சிய முனையத்தின் மொத்த எரிபொருள் விநியோகத்தில் 76% இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு உரித்தானவை ஆகும். மீதமுள்ள 24% லங்கா இந்தியன் ஒயில் கம்பெனி, சினோபெக் கம்பெனி, ஆர்.எம். பார்க் கம்பெனி மற்றும் யுனைடெட் பெற்றோலிய கம்பெனிக்கு உரித்தான எரிபொருளாகவும் உள்ளது.

அட்டவணை 2.2.11
வரையறுக்கப்பட்ட இலங்கை பெற்றோலிய களஞ்சிய முனையத்தின் எரிபொருள் விநியோக முன்னேற்றம் -2024

உற்பத்திகள்	தொகை (கி.லீ)					
	இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்	லங்கா இந்தியன் ஒயில் கம்பனி	சினோபக்	ஆர்.எம். பார்க்	யுனைட்டெட் பெற்றோலியம் லிமிட்டெட்	மொத்தம்
மசகு எண்ணெய்	339,256	-	-	-	-	339,256
ஜெட் A-1	557,515	-	-	-	-	557,515
லங்கா ஓடோ டீசல்	1,074,364	142,085	208,401	98,630	17,371	1,540,852
லங்கா சுப்பர் டீசல்	27,813	3,887	6,966	4,679	832	44,178
நெப்தா	197,241	-	-	-	-	197,241
பெற்றோல் 92 ஒக்டேன்	935,908	160,109	218,092	111,137	23,701	1,448,947
பெற்றோல் 95 ஒக்டேன்	27,449	12,250	5,963	4,046	878	50,586
மொத்தம்	**3,159,547**	**318,331**	**439,422**	**218,493**	**42,781**	**4,178,575**

மூலம்: வரையறுக்கப்பட்ட இலங்கை பெற்றோலிய களஞ்சிய முனையம

வரைபு 2.2.3
இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் எரிபொருள் விநியோகம்-2024



அட்டவணை 2.2.12
எரிபொருள் நிரப்பு நிலையங்களின் மொத்த எண்ணிக்கை
(2024.12.31 ஆம் திகதியில் உள்ளவாறான)

மாகாணம்	இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்	லங்கா இந்தியன் ஒயில் கம்பனி	சினோபக்	ஆர்.எம். பார்க்	யுனைட்டெட் பெற்றோலியம் லிமிட்டெட	மொத்தம்
மத்திய மாகாணம்	64	33	10	11	11	129
கிழக்கு மாகாணம்	87	18	12	15	10	142
வடமத்திய மாகாணம்	53	13	9	9	9	93
வட மாகாணம்	96	16	7	8	7	131
வடமேல் மாகாணம்	122	28	23	25	28	226
சபரகமுவ மாகாணம்	51	18	10	10	10	99
தென் மாகாணம்	114	27	11	13	13	178
ஊவா மாகாணம்	36	15	8	9	4	72
மேல் மாகாணம்	201	93	38	47	27	406
மொத்தம்	**824**	**261**	**128**	**147**	**119**	**1,476**

2.2.5 2024 ஆம் அண்டில் முன்னெடுக்கப்பட்ட ஒழுங்குபடுத்தல் செயற்பாடுகள்

- **பெற்றோலியத் தொழிற்துறைக்கான புதிய ஒழுங்குபடுத்துனரை அறிமுகம் செய்தல்**

பெற்றோல், டீசல், மண்ணெண்ணெய், விமான எரிபொருள், உலை எண்ணெய், திரவப் பெற்றோலிய வாயு (LPG) மற்றும் உராய்வுநீக்கி எண்ணெய் உள்ளடங்கலான பெற்றோலியப் பொருட்களின் இறக்குமதி, சுத்திகரிப்பு, விநியோகம் மற்றும் சந்தைப்படுத்தல் ஆகியவற்றை உள்ளடக்கிய இலங்கையின் கீழ்நிலை பெற்றோலியத் தொழிற்துறையானது, தற்போதுள்ள சட்ட கட்டமைப்பிற்குள்ளேயே செயற்படுகின்றது. புதிய போட்டியாளர்கள் சந்தைக்குள் பிரவேசித்துள்ளமையினால், தற்போதுள்ள பெற்றோலியச் சந்தைச் செயற்பாடுகள் வரிவுபடுத்தப்பட்டுள்ளது. இதன் காரணமாக, உற்பத்தி தரத்தை அதிகரிக்கவும், நுகர்வோர், முதலீட்டாளர்கள் மற்றும் பிற பங்குதாரர்களின் நலன்களைப் பாதுகாக்கும் வகையான சுயாதீனமான ஒழுங்குபடுத்தல் மற்றும் வலுவான ஒழுங்குமுறை கட்டமைப்பின் அவசியத்தை இவ் விடயப்பரப்பு அடிக்கோடிட்டுக் காட்டுகிறது.

இதற்கிணங்க, 24/0691/621/038 ஆம் இலக்கமிடப்பட்ட 2024.04.25 ஆம் திகதியிடப்பட்ட அமைச்சரவை விஞ்ஞாபனத்திற்கு அமைச்சரவை அமைச்சர்களால் வழங்கப்பட்ட ஒப்புதலின் படி, கீழ்நிலை பெற்றோலியத் தொழிற்துறைக்கு செயற்திறன் மற்றும் வினைத்திறன் மிக்கதுமான ஒழுங்குபடுத்தல் பொறிமுறையை அறிமுகம் செய்வதற்கு நிபுணர் குழு சிபார்சு செய்துள்ளதுடன் இக் குழுவின் சிபார்சுகள் பின்வருமாறு;

- கீழ்நிலை பெற்றோலிய தொழிற்துறையை ஒழுங்குபடுத்துவதற்கும் மற்றும் மேற்பார்வை செய்வதற்கும் “இலங்கை பெற்றோலிய தொழிற்துறை ஒழுங்குபடுத்தல் ஆணைக்குழு” ஒன்றை நிறுவுதல்.
- பெற்றோலியத் தொழிற்துறைக்கான ஒழுங்குபடுத்தல் சட்டத்தை நிறைவேற்றுதல்

மேற்குறிப்பிட்ட முன்மொழிவுகளை நடைமுறைப்படுத்துவதற்கு தேவையான சட்டங்கள் அமைச்சரவை அமைச்சர்களின் ஒப்புதலுடன் சட்ட வரைஞ்ஞருக்கு அனுப்பப்பட்டுள்ளன. பெற்றோலியத் தொழிற்துறையை ஒழுங்குபடுத்துவது தொடர்பான புதிய அரசாங்கத்தின் கொள்கை அனுமதியைப் பெற்றதன் பின்னர், பெற்றோலியத் தொழிற்துறைக்கான நிரந்தர ஒழுங்குபடுத்துனர் நியமிக்கப்படுவார்.

- **எரிபொருள் நிரப்பும் நிலையத்தை நிறுவுதல் மற்றும் செயற்படுத்துவதற்கான வழிகாட்டுதலை அறிமுகப்படுத்துதல்**

1961 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் ஏற்பாடுகளின் படி, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் (CPC) மட்டுமே பெற்றோலியம் மற்றும் அது தொடர்பான அனைத்து பொருட்களையும் இறக்குமதி செய்து விநியோகித்திருந்தது. எவ்வாறாயினும், சந்தை தாராளமயமாக்கப்பட்டதனால், தற்போது இலங்கை பெற்றோலிய கூட்டுத்தாபனம் (CPC) நீங்கலாக லங்கா இந்தியன் ஒயில் கம்பனி (LIOC), சினோபெக் எனர்ஜி லங்கா (பிரைவேட்) லிமிடெட் (Sinopec), R.M. Park (Pvt) Ltd மற்றும் United Petroleum Lanka (Pvt) Ltd ஆகிய நிறுவனங்களும் எரிபொருளை இறக்குமதி செய்து விநியோகிக்கின்றன.

தற்போது, புதிய போட்டி நிறுவனங்கள் சந்தையில் உள் நுழைந்துள்ளதனால், மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சு எரிபொருள் நிரப்பு நிலையங்களை நிறுவுதல் மற்றும் பராமரித்தல் தொடர்பாக குறைந்தபட்ச தகுதிநிலைகளை உள்ளடக்கிய வழிகாட்டுதலை அறிமுகப்படுத்தியுள்ளது. இதன் விபரங்கள் பின்வருமாறு.

- எரிபொருள் நிரப்பு நிலைய அமைவிடம் தொடர்பான பிரமாணங்கள்
- எரிபொருள் நிரப்பு நிலையத்தை நிர்மாணிப்பதற்கான குறைந்தபட்ச தகுதிநிலைகள்
- எரிபொருள் நிரப்பு நிலையத்தின் செயற்பாட்டு செயற்பாடுகளை பராமரிப்பதற்கான பிரமாணங்கள்

இவ் வழிகாட்டுதல்களைப் பின்பற்றுமாறு எரிபொருள் விநியோக நிறுவனங்களுக்குத் அறிவிக்கப்பட்டுள்ளதுடன், பொதுமக்களின் தகவல்களுக்காக அமைச்சின் இணையதளத்தில் வழிகாட்டுதல்கள் வெளியிடப்பட்டுள்ளன. மேலும், இவ் வழிகாட்டுதல்களுக்கிணங்க புதிய எரிபொருள் விநியோக நிறுவனங்கள் செயல்படுகின்றனவா என்பதையும் அமைச்சு கண்காணிக்கும்.

- **பெற்றோலியப் பொருட்களை நேரடியாக நுகர்வோர் நிறுவனங்களுக்கு வழங்கும் செயல்முறையை நெறிப்படுத்துதல்**

எரிபொருள் விநியோக நிறுவனங்கள், நுகர்வோர் நிறுவனங்களுக்கு நேரடியாகவும், நாடு முழுவதும் நிறுவப்பட்ட எரிபொருள் நிரப்பு நிலையங்கள் மூலமாகவும் எரிபொருளை விநியோகிக்கின்றன.

வாடிக்கையாளர் சேவை மையங்கள் மூலம் தினமும் கணிசமான அளவு எரிபொருள் விநியோகிக்கப்படுவதால், வாடிக்கையாளர் சேவை நிலையங்களை நிறுவுவதற்கான செயற்பாடுகளை நெறிப்படுத்த வேண்டிய அவசியத் தன்மை அடையாளம் காணப்பட்டது. இதற்கிணங்க, தற்போது பதிவுசெய்யப்பட்ட வாடிக்கையாளர் சேவை நிலையங்களிலிருந்து சில நிலையங்களை மேலும் பராமரிப்பதற்கும் மற்றும் புதிய நிறுவனங்களைப் பதிவு செய்வதற்குமான குறைந்தபட்ச அளவுகோல்களை அறிமுகப்படுத்துவதற்கு அமைச்சு நடவடிக்கைகள் எடுத்துள்ளது. எரிபொருள் வழங்கும் நிறுவனங்கள் மூலம் குறைந்தபட்ச அளவுகோல்களை பூர்த்தி செய்யும் வாடிக்கையாளர் சேவை நிலையங்களிற்கு ஒப்புதல் வழங்குவதற்கு அமைச்சு நடவடிக்கைகள் எடுத்துள்ளது, மேலும், 2024.12.31 ஆம் திகதியில் உள்ளவாறு அமைச்சால் அங்கீகரிக்கப்பட்ட வாடிக்கையாளர் சேவை நிலையங்களின் விபரங்கள் கீழே அட்டவணை 2.2.13 இல் தரப்பட்டுள்ளது.

அட்டவணை 2.2.13
நுகர்வோர் சேவை நிலையங்களின் எண்ணிக்கை
(2024.12.31 ஆம் திகதியில் உள்ளவாறான)

வழங்கல் நிறுவனம்	நுகர்வோர் சேவை நிலையங்களின் எண்ணிக்கை
இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்	1042
லங்கா இந்தியன் ஒயில் கம்பனி	170
சினோபக	13
மொத்தம்	1225

மூலம்: இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம், லங்கா இந்தியன் ஒயில் கம்பனி, சினோபக் எனர்ஜி லங்கா (பிரைவேட்) லிமிட்டெட்

- **எரிபொருள் விலைச் சூத்திரத்தை அமுல்படுத்துதல்**

நீண்ட காலமாக நிலவி வந்த முறைசாரா எரிபொருள் விலை நிர்ணய பொறிமுறையின் மூலம் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் பாரிய நிதி நெருக்கடியை எதிர்கொண்டுள்ளதுடன், எரிபொருள் விலை திருத்தங்கள் மூலம் எரிபொருள் விலையில் பாரிய ஏற்ற இறக்கங்கள் இருப்பது தெளிவாகத் கண்டறியப்பட்டுள்ளது. இதனை இல்லாதொழிக்கும் நோக்கத்துடன், 2022 மே மாதத்திலிருந்து அமலுக்கு வரும் வகையில், செலவினங்களை உள்ளடக்கியதாக விலைச் சூத்திரத்தின் மூலம் எரிபொருள் விலையை நிர்ணயிக்கும் ஆரம்பகட்ட நடவடிக்கைகளை அரசாங்கம் எடுத்துள்ளது.

2024 ஆம் ஆண்டில், பதினொரு (11) முறை எரிபொருள் விலையில் திருத்தங்களை மேற்கொண்டுள்ளன. டிசம்பர் 2023 இல் இருந்த எரிபொருள் விலைகளுடன் ஒப்பிடும்போது டிசம்பர் 2024 இல் உள்ள எரிபொருள் விலைகளைக் கருத்தில் கொண்டால், பெற்றோல் (ஒக்டேன் 92) விலை 11% தத்தாலும், பெற்றோல் (ஒக்டேன் 95) விலை 17% தத்தாலும், ஓட்டோ டீசல் விலை 17% தத்தாலும், சூப்பர் டீசல் விலை 31% தத்தாலும் மற்றும் மண்ணெண்ணெய் விலை 20% தத்தாலும் குறைந்துள்ளது.

அட்டவணை 2.2.14
2024 ஆம் ஆண்டில் பதிவான அதிகபட்ச மற்றும் குறைந்தபட்ச சந்தை விலைகள்

உற்பத்தி	ஆகக் கூடிய விலை	ஆகக் குறைந்த விலை
பெற்றோல் 92 ஒக்டேன்	ரூ .371.00 (பெப்ரவரி/மார்ச்/ஏப்ரல்)	ரூ. 309.00 (டிசம்பர்)
பெற்றோல் 95 ஒக்டேன்	ரூ. 464.00 (ஜனவரி)	ரூ. 371.00 (நவம்பர்/ டிசம்பர்))
ஓடோ டீசல	ரூ. 363.00 (பெப்ரவரி/மார்ச்/ஏப்ரல்)	ரூ. 283.00 (நவம்பர்)
சுப்பர் டீசல்	ரூ. 475.00 (ஜனவரி)	ரூ. 313.00 (நவம்பர்/ டிசம்பர்)
மண்ணெண்ணெய்	ரூ. 262.00 (பெப்ரவரி)	ரூ. 183.00 (ஒக்ரோபர்/ நவம்பர்)

மூலம்: இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

வரைபு 2.2.4
2024 ஆம் ஆண்டில் பதிவு செய்யப்பட்ட சந்தை விலைகள்



மூலம்: இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்



மூலம்: இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்



மூலம்: இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்



மூலம்: இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்



மூலம்: இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

2.2.6 பெற்றோலியச் சந்தை

■ உராய்வு நீக்கி எண்ணெய்

1961 ஆம் ஆண்டின் 28 ஆம் இலக்க இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் பிரிவு 5(C) மற்றும் தொடர்புடைய திருத்தப்பட்ட விதிகளின் அடிப்படையில் உராய்வு நீக்கி எண்ணெய் ஒரு பெற்றோலியப் பொருளாக வரையறுக்கப்படுகிறது. இதற்கிணங்க, தொடர்புடைய அதிகாரங்களின் படி, இலங்கையில் உராய்வு நீக்கி

எண்ணெய் சந்தை 06/0858/217/015 ஆம் இலக்கமிடப்பட்ட 2006.05.08 ஆம் திகதியிடப்பட்ட அமைச்சரவைப் விஞ்ஞாபனம் (2006.05.24 ஆம் திகதியிடப்பட்ட அமைச்சரவைத் தீர்மானம்) மற்றும் 1453/6 ஆம் இலக்கமிடப்பட்ட 12.07.2006.07.12 ஆம் திகதியிடப்பட்ட அதிவிசேட வர்த்தமானி அறிவிப்பு மூலம் முழுமையாக தாராளமயமாக்கப்பட்டது.

இதற்கிணங்க, 2024 ஆம் ஆண்டுக்குள், 34 நிறுவனங்கள் நாட்டிற்கு உராய்வு நீக்கி எண்ணெயை இறக்குமதி செய்வதற்கு ஒப்புதல் பெற்றுள்ளன, மேலும் இந்த நிறுவனங்கள் 5 செயற்பாடுகளின் கீழ் செயற்படுகின்றன.

செயற்பாடு	விபரம்	நிறுவனங்களின் எண்ணிக்கை
A1	உராய்வு நீக்கி எண்ணெய் மற்றும் கிறீஸ் போன்றவற்றை இறக்குமதி செய்தல், ஏற்றுமதி செய்தல், கலவை செய்தல அல்லது உற்பத்தி செய்தல், விற்பனை செய்தல், வழங்கல், அல்லது விநியோகித்தல்	4
A2	உராய்வு நீக்கி எண்ணெய் மற்றும் கிறீஸ் போன்றவற்றை இறக்குமதி செய்தல், ஏற்றுமதி செய்தல், விற்பனை செய்தல், வழங்கல் மற்றும் விநியோகித்தல்	27
B	இறக்குமதி,ஏற்றுமதி, வழங்கல் விநியோகித்தல் அல்லது OEM ஆல் சிபார்சு செய்ப்பட்ட அசல்(Genuine) மாற்றீடு எண்ணெயை (CVT, ATF. Gear Oil) விற்பனை செய்தல்.	1
C1	கப்பல்களுக்கான உராய்வு நீக்கி எண்ணெய் மற்றும் கிறீசை(Grease) விற்பனை செய்தல் அல்லது இறக்குமதி,ஏற்றுமதி, வழங்கல் விநியோகித்தல	1
C2	கைத்தொழில்துறைக்கான உராய்வு நீக்கி எண்ணெய் மற்றும் கிறீசை(Grease) விற்பனை செய்தல் அல்லது இறக்குமதி,ஏற்றுமதி, வழங்கல் அல்லது விநியோகித்தல	1

■ தார்

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் சுத்திகரிப்பு நிலையம் தாரை உற்பத்தி செய்வதாலும், உள்நாட்டு கேள்வியை பூர்த்தி செய்வதற்கு இது போதுமானதாக இல்லாததால், ஏற்றுக்கொள்ளப்பட்ட அளவுகோல்களின் அடிப்படையில் தாரை இறக்குமதி செயவதற்கு அனுமதி வழங்கப்படுகிறது. இதற்கிணங்க, 2024 ஆம் ஆண்டில் நாட்டின் அபிவிருத்தி செயற்பாடுகளுக்குத் தேவையான 185,000 மெற்றிக் தொன் தாரை இறக்குமதி செய்வதற்கு 11 நிறுவனங்களுக்கு அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

■ கப்பல் எண்ணெய்

கப்பல் எரிபொருள் வர்த்தகம் நாட்டிற்கு அந்நிய செலாவணியை வழங்கும் பிரதான துறையாகும், மேலும் இத் துறையின் அபிவிருத்திக்கு சிறப்பு கவனம் செலுத்தப்பட்டுள்ளது. கப்பல் எரிபொருள் வர்த்தகத்தில் ஈடுபடுவதற்குத் தேவையான அதிகாரத்தை அமைச்சும் வழங்குகிறது. இதற்கிணங்க, 2024 ஆம் ஆண்டில் கப்பல் எரிபொருளை இறக்குமதி செய்து விற்பனை செய்வதற்கு 13 நிறுவனங்கள் அங்கீகரிக்கப்பட்டுள்ளன, மேலும் சுமார் 1,085,749 மெற்றிக் தொன் கப்பல் எரிபொருள் விறபனை செய்யப்பட்டுள்ளது.

■ விமான எரிபொருள்

இந் நாட்டில் விமானங்களுக்குப் பயன்படுத்தப்படும் ஜெட் A-1 எரிபொருளின் விநியோகம் தற்போது இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் மேற்கொள்ளப்படுகிறது, மேலும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனச் சட்டத்தின் படி விமான எரிபொருளை வழங்குவதற்கான அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கு இவ் விடயத்திற்குப் பொறுப்பான அமைச்சருக்கு அதிகாரம் உள்ளது. தற்போது, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் ஜெட் A-1 எரிபொருள் தேவையைப் பூர்த்தி செய்கிறது, மேலும் இவ் எரிபொருளை இறக்குமதி செய்வதற்கு 02 பிற நிறுவனங்களுக்கு ஒப்புதல் வழங்கப்பட்டுள்ளது.

அனுமதிப்பத்திரதாரர்களிடமிருந்து பெற்றுக்கொண்ட வருமானம்- 2024

எரிபொருள் வகை	மாறும் கட்டண வருமானம் (ரூ.)	வருடாந்த வருமானம் (ரூ)
உராய்வு நீக்கி எண்ணெய்	451,793,992.71	217,195,180.63
தார்	23,590,017.00	21,600,000.00
கப்பல் எண்ணெய்	-	20,379,415.80
ஜெட்A - 1	-	9,144,598.00
மொத்தம்	475,384,009.71	268,319,194.43

நிறுவனத்தின் பெயர்	எரிபொருள் நிரப்பு நிலையத்தை நிறுவுவதற்கான கட்டணம் (ரூ./அ.மெ.டொ)
இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனம்	624,061,000.00
லங்கா இந்தியன் ஒயில் கம்பனி	581,071,400.00
ஆர்.எம். பார்க்	*அமெ.டொ.2*,000,000
சினோபக்	610,806,800.00
யுனைட்டெட் பெற்றோலியம் லிமிட்டெட்	599,751,000.00

உள்நாட்டு தொழிற்துறை மற்றும் சேவை அனுமதிப்பத்திரதாரர்களால் இறக்குமதி செய்யப்படாத பெற்றோலியம் தொடர்பான பொருட்களின் இறக்குமதிக்கு ஆட்சேபனையின்மை கடிதங்களை வழங்குதல் - 2024

தொழிற்துறைக்கு பிரதானமான பொருட்கள் மற்றும் பெற்றோலியப் பொருட்கள் தொடர்பான பொருட்களை இறக்குமதி செய்வதற்காக நிறுவனங்கள் அமைச்சிடம் தினசரி கோரிக்கைகளை சமர்ப்பிக்கின்றன, மேலும் அமைச்சின் தலைமையால் நியமிக்கப்பட்ட ஒரு குழு இக் கோரிக்கைகள் தொடர்பாக பரிந்துரைகளை வழங்குகிறது.

இதற்காக, கைத்தொழில் அமைச்சு, இலங்கை முதலீட்டு சபை, இரசாயன ஆயுத உடன்படிக்கையை நடைமுறைப்படுத்துவதற்கான தேசிய அதிகாரசபை மற்றும் நிறுவனங்கள் தனித்தனியாக தங்கள் பரிந்துரைகளை வழங்குகின்றன.

இதற்கிணங்க, 2024 ஆம் ஆண்டில் பின்வரும் வகைகளின் கீழ் பொருட்களை இறக்குமதி செய்வதற்கு எந்த ஆட்சேபனையும் இல்லை என்பதை உறுதிப்படுத்தும் கடிதங்களை வலுசக்தி அமைச்சு வழங்கியுள்ளது.

- இறப்பர் தொடர்பான தயாரிப்புகளுக்கு
- ஆடை தொடர்பான தயாரிப்புகளுக்கு
- அழகுசாதனப் பொருட்கள் தொடர்பான தயாரிப்புகளுக்கு
- வர்ணப்பூச்சு தொடர்பான தயாரிப்புகளுக்கு
- ஏனைய தொழிற்துறை தொடர்பான தயாரிப்புகளுக்கு
- ஏனைய தொழிற்துறைகள் மற்றும் சேவை நிறுவனங்களுக்கு விற்பனை செய்வதற்கு

2.2.7 பெற்றோலியம் சார்ந்த உட்கட்டமைப்பு வசதிகள் அபிவிருத்தி திட்டங்கள்

- **ஏற்றுமதி சார்ந்த பெற்றோலிய சுத்திகரிப்பு நிலையம் மற்றும் அதனுடன் தொடர்புடைய பொருட்களை உற்பத்தி செய்யும் நிலையத்தை நிறுவுதல்.**

அம்பாந்தோட்டையில் ஏற்றுமதி சார்ந்த பெற்றோலிய சுத்திகரிப்பு நிலையம் மற்றும் அதனுடன் தொடர்புடைய உற்பத்தியை மேற்கொள்வதற்கான நிலையத்தை நிறுவுவதற்கு தகுதிவாய்ந்த முதலீட்டாளர்களிடமிருந்து 2023.02.24 ஆம் திகதி மின்சக்தி மற்றும் வலுசக்தி அமைச்சு ஆர்வங்களிற்கான வெளிப்பாடுகளை (EOI) கோரியிருந்ததுடன், இதற்கு பதிலளிக்குமுகமாக ஏழு (07) முதலீட்டாளர்கள் தங்கள் ஆர்வங்களை வெளிப்படுத்தியிருந்தனர். இவ் முன்மொழிவுகளை மதிப்பீடு செய்ததன் பின்னர், வேண்டுகோள்களுக்கான முன்மொழிவுகளை (RFPs) சமர்ப்பிப்பதற்கு இரு (02) நிறுவனங்கள் தகுதிவாய்ந்தனவாகக் காணப்பட்டன. இவற்றில், M/s China Petroleum and Chemical Corporation நிறுவனம் மட்டுமே விரிவான முன்மொழிவை சமர்ப்பித்திருந்தது. இவ் விரிவான முன்மொழிவானது திட்டக் குழு (PC) மற்றும் அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட பேரம்பேசும் குழுவால் (CANC) கவனத்தில் எடுக்கப்பட்டதன் பின்னர், இதன்படி அமைச்சரவை அமைச்சர்கள் சுத்திகரிப்பு நிலையத்தை நிறுவுவதற்கும் மற்றும் பராமரிப்பதற்கு M/s China Petroleum and Chemical Corporation நிறுவனத்திற்கு ஒப்புதல் அளித்துள்ளனர். இதற்கிணங்க, இது தொடர்பான உடன்பாடுகளை எட்டுவதற்கு M/s China Petroleum and Chemical Corporation நிறுவனத்துடன் நான்கு சுற்று பேச்சுவார்த்தைகள் இடம்பெற்றுள்ளதுடன் இவை தற்போது இறுதிநிலையில் உள்ளன.

கருத்திட்டத்திட்டத்தின் பிரதான விடயங்கள்

- சுத்திகரிப்பு நிலையத்தின் திறன் - நாளொன்றுக்கு குறைந்த பட்சம் 10,000 பரல்
- எதிர்பார்க்கப்பட்ட முதலீடு – USD 1.5 பில்லியன் - USD 2 பில்லியன்
- எதிர்பார்க்கப்பட்ட கருத்திட்ட காலம் - 2024 - 2028

இவ் கருத்திட்டத்தின் மூலம் நாட்டில் எரிபொருள் பாதுகாப்பை உறுதி செய்தல், புதிய வேலை வாய்ப்புகளை உருவாக்குதல், பெற்றோலியத் தொழிற்துறையுடன் தொடர்புடைய புதிய தொழிற்துறை வாய்ப்புகளை உருவாக்குதல் மற்றும் நாட்டிற்கு அந்நியச் செலாவணி நன்மைகளைப் பெற்றுக்கொள்ளுதல் ஆகியவை எதிர்பார்க்கப்படுகின்றன.

- **திருகோணமலை தாங்கிப் பண்ணை அபிவிருத்தி**

திருகோணமலை சீனக்குடாவில் உள்ள மேல் நிலைத் தாங்கிப் பண்ணை பிரித்தானிய காலணித்துவ ஆட்சிக் காலத்தில் கப்பல்களுக்கு எரிபொருளை வழங்குவதற்காக பிரித்தானிய அரசால் நிர்மாணிக்கப்பட்டுள்ளதுடன் இவை தொன்னூற்றொன்பது (99) களஞ்சியத் தாங்கிகளைக் கொண்டுள்ளதாகும். இவ் களஞ்சியத் தாங்கிகள் ஒவ்வொன்றும் 10,000 MT திறன் கொண்டதாக உள்ளது. மேலும், 21/2285/325/050 ஆம் இலக்கமிடப்பட்ட 2022.01.11 ஆம் திகதியிடப்பட்ட அமைச்சரவைத் தீர்மானத்தின் மூலம் இவ் களஞ்சியத் தாங்கிகளை 50 வருடத்திற்கு குத்தகைக்கு விடுவதற்கு தீர்மானிக்கப்பட்டது. இதன் விபரங்கள் பின்வருமாறு;

- ✓ இலங்கைப் பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு 24 எண்ணெய் தாங்கிகள்
- ✓ லங்கா இந்தியன் ஒயில் கம்பனிக்கு (LIOC) 14 எண்ணெய் தாங்கிகள்
- ✓ வரையறுக்கப்பட்ட தனியார் திருகோணமலை பெற்றோலிய முனையத்திற்கு (TPTL) 61 எண்ணெய் தாங்கிகள்

வரைபடம் 2.2.1
திருகோணமலை தாங்கிப் பண்ணை



- **இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்குச் உரித்தான 24 தாங்கிகளை அபிவிருத்தி செய்யும் பணிகளின் முன்னேற்றம்**

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்குச் உரித்தான 24 தாங்கிகளை அபிவிருத்தி செய்வதற்கான மொத்த செலவின் US$ 20 மில்லியன் என மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதுடன், இவ் கருத்திட்டத்திற்கு இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் நிதியீட்டம் செய்யப்பட்டுள்ளதுடன், இவ் கருத்திட்டம் இரு கட்டங்களாக அமுல்படுத்தப்படும்.

2024.12.31 ஆம் திகதியில் பின்வரும் பணிகள் பூர்த்திசெய்யப்படும்

- கட்டம் -1 தாங்கிகளை பொறியியல் ரீதியாக சுத்தம் செய்தல் (12 தாங்கிகள்)
- கட்டம் -2 தாங்கிகளை பொறியியல் ரீதியாக சுத்தம் செய்தல் (9 தாங்கிகள்)
- தாங்கிகளின் சுகாதாரத்தை பரிசோதனையிடல்
- தளத்தை புகைப்பட வரைபடவியல் ரீதியாக ஆய்வு செய்தல் உள்ளடங்கலாக கட்டடத்தை புவியியல் ரீதியாக ஆய்வு செய்தல்
- நீர் குழாய்களை நிர்மாணித்தல்

வரையறுக்கப்பட்ட தனியார் திருகோணமலை பெற்றோலிய முனையத்திற்கு (TPTL) உரித்தான தாங்கிகளை அபிவிருத்தி செய்யும் பணிகளின் முன்னேற்றம்

வரையறுக்கப்பட்ட தனியார் திருகோணமலை பெற்றோலிய முனையத்திற்கு (TPTL வழங்கப்பட்ட 61 எரிபொருள் தாங்கிகளின் அபிவிருத்திக்கான முதல் படியாக பின்வரும் செயற்பாடுகள் ஏற்கனவே பூர்த்திசெய்யப்பட்டுள்ளன.

- பத்து (10) எரிபொருள் தாங்கிகளுக்கான பாதையினை துப்பரவு செய்தல்
- Bureau Veritas Lanka (Pvt) Ltd நிறுவனத்திடமிருந்து இவ் பத்து (10) எரிபொருள் தாங்கிகளுக்கான தர மேற்பார்வை அறிக்கையை பெற்றுக்கொள்ளல்
- நீண்ட கால மற்றும் குறுங்கால அபிவிருத்தி மூலோபாயங்களை அடையாளம் காண்பதற்கான சாத்தியவள ஆய்வுகளை முன்னெடுத்தல்

திட்டத்தை செயற்படுத்துவதற்கு பொருத்தமான முதலீட்டாளரைத் தேர்ந்தெடுப்பதற்காக, முன்மொழிவுகளுக்கானஆர்வங்கள் கோரப்பட்டதுடன் இதற்கு பதிலளிக்குமுகமாக 05 நிறுவனங்கள் தங்கள் முன்மொழிவுகளைச் சமர்ப்பித்துள்ளன. அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட திட்டக் குழு (CAPC) மற்றும் அமைச்சரவையால் நியமிக்கப்பட்ட பேரம்பேசும் குழு (CANC) ஆகியவை இவ் முன்மொழிவுகளை மதிப்பீடு செய்கின்றன.

- **கொலன்னாவையில் ஆறு (06) களஞ்சியத் தாங்கிகளை நிர்மாணித்தல் மற்றும் செயற்படுத்துதல்**

மொத்தக் கொள்ளளவு 64,000 m^3 உள்ள 06 தாங்கிகளை நிர்மாணிப்பதற்கான ஒப்பந்தம் ரூ.2286.8 மில்லியன் பெறுமதியில் வரி நீங்கலாக 2019.10.24 ஆம் திகதி வழங்கப்பட்டது. இவ் ஒப்பந்தக்காரரின் அசமந்த செயற்பாடுகள் காரணமாக இவ் ஒப்பந்தம் 2022.01.19 ஆம் திகதி இரத்துச்செய்யப்பட்டது. இவ் ஒப்பந்தம் இடைநிறுத்தப்பட்டபோது இத் திட்டத்தின் மொத்த முன்னேற்றம் 18% மாகக் காணப்பட்டது. இத் திட்டத்தை மீள செயற்படுத்துவதற்கு ரூ.3374 மில்லியன் (வரி நீங்கலாக) தேவையென மதிப்பீடு செய்யப்பட்டுள்ளதுடன், இதற்கான பொருத்தமான ஒப்பந்தக்காரரை தெரிவுசெய்வதற்கு அமைச்சரவை அமைச்சர்களின் ஒப்புதலுடன் கேள்வி மனு கோரப்பட்டுள்ளது. சமர்ப்பிக்கப்பட்ட கேள்வி மனுக்கள் மதிப்பீட்டு நிலையில் உள்ளதுடன் இவ் ஒப்பந்தம் 2025 பெப்ரவரி மாதமளவில் வழங்கப்படுமென் எதிர்பார்க்கப்பட்டுள்ளது. இத் திட்டத்திற்கான எதிர்பார்க்கப்பட்ட காலம் 24 மாதங்களாகும்.

- **கொலன்னாவ முனையத்தில் இருந்து கொழும்பு துறைமுகம் வரை 18 அங்குல விட்டம் கொண்ட புதிய குழாய்த் தொகுதியை நிர்மாணித்தல்**

கொழும்பு துறைமுகத்திலிருந்து கொலன்னாவை முனையத்திற்கு எரிபொருளை கொண்டு செல்லும் குழாய் அமைப்பு மிகவும் பழமையானதும் மற்றும் பழுதடைந்தும் உள்ளர். எனவே எரிபொருள் பரிமாற்றத்தை வினைத்திறனுடன் மேற்கொள்வதற்காக 18 அங்குல விட்டம் கொண்ட குழாய் அமைப்பை அமைப்பதற்கு திட்டமிடப்பட்டது. இதற்கான, பெறுகை செயற்பாடுகள் தேசிய திட்டமிடல் திணை க்களம் மற்றும் அமைச்சரவை அமைச்சர்களின் ஒப்புதலுடனும் ஆரம்பிக்கப்பட்டுள்ளன. இதன் மதிப்பீடு செய்யப்பட்ட செலவினம் ரூ.2,853 மில்லியன்(வரி நீங்கலாக) ஆவதோடு இத் திட்டத்தின் காலம் 18 மாதங்களாகும்.

- **மாகல்லவில் உள்ள பிராந்திய மொத்த களஞ்சியசாலையில் தீயணைப்பதற்குத் தேவையான நீரை களஞ்சியப்படுத்துவதற்கான திறனை அதிகரித்தல் மற்றும் மின்பிறப்பாக்கிக்கான அறையை நிர்மாணித்தல்**

மாகல்லவில் உள்ள பிராந்திய மொத்த களஞ்சியசாலையில் தீயணைப்பதற்குத் தேவையான நீரை களஞ்சியப்படுத்துவதற்கு 110,000 m^3 கொள்ளளவுள்ள தாங்கியை நிர்மாணிப்பதற்கான நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளது. இதன் மூலம் நீரின் களஞ்சியத் திறன் 90,000 m^3 இல் இருந்து 200,000 m^3 ஆக அதிகரிக்கப்படும். இதற்கான மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி ரூ.12 மில்லியன் ஆகும்.

- **கொலன்னாவையில் உள்ள 6 வலயங்களில் துணை குழாய் அமைப்பு முறையை நிர்மாணித்தல்**

வரையறுக்கப்பட்ட இலங்கை பெற்றோலிய களஞ்சிய முனையம் 07 வலயங்களில் அதிக திறன் கொண்ட புதிய பம்பிகளை நிறுவி எரிபொருள் நிரப்பும் கையாளுகையை அதிகரிக்கும் அதேவேளை எரிபொருள் நிரப்பும் கையாளுகை திறன்களை அதிகரிப்பதற்கும் திட்டமிடப்பட்டுள்ளது. இதற்காக, கொலன்னாவையில் உள்ள 6 வலயங்களில் நிறுவப்பட்டுள்ள நவீன பம்மி நிலையங்களை இணைக்கும் குழாய்களுக்கு தேவையான துணை முறைகள் மற்றும் இது தொடர்பான வசதிகளுக்கான முறைகள் நிர்மாணிக்கப்பட்டுள்ளன. இதற்கான மதிப்பீடு செய்யப்பட்ட பெறுமதி ரூ. 76 மில்லியன் (வரி நீங்கலாக) ஆகும்.

- **தற்போதுள்ள காங்கேசன்துறை பிராந்திய தொகை களஞ்சிய நிலையத்தை இடமாற்றம் செய்தல்**

காங்கேசன்துறையில் அமைந்துள்ள பிராந்திய தொகை களஞ்சிய நிலையமானது, வட மாகாணத்திற்கு எரிபொருள் விநியோகிப்பதில் பிரதான பங்கு வகிக்கின்றது. இவ் களஞ்சிய நிலையமானது சீமெந்துக் கூட்டுத்தாபனத்திற்கு உரித்தான காணியில் அமைந்துள்ளதுடன் தற்போது இது பாவினையில் இல்லாதுள்ளது. பின்னர், இவ் பிராந்திய தொகை களஞ்சிய நிலையமானது வரையறுக்கப்பட்ட இலங்பை பெற்றோலியகளஞ்சிய முனையத்திற்கு உரித்தான காணியில் மீள ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதன் மொத்த கொள்ளளவுத் திறன் 540,000 லீற்றர் ஆகும். இதனை நிர்மாணிப்பதற்கான மதிப்பீடு செய்யப்பட்ட தொகை ரூ.170 மில்லியன்(வரி நீங்கலாக) ஆவதோடு இதன் நிர்மாணப் பணிகள் மூன்று கட்டங்களாக முன்னெடுக்கப்படுகின்றன. இதன் நிர்மாணப் பணிகள் 2025 ஜனவரி மாதத்தில் பூாத்தியடையுமென எதிர்பார்க்கப்பட்டுள்ளது.

2.2.8 எதிர்காலத் திட்டங்கள் 2025

உள்நாட்டு எரிசக்தி தேவையை பூர்த்தி செய்வதில் கனியவள எண்ணெய் குறிப்பிடத்தக்க பங்கை வகிப்பதால், உள்நாட்டு எரிசக்தி பாதுகாப்பை உறுதி செய்யும் நோக்கத்துடனும், உலகளாவிய எரிசக்தி விநியோகத்தில் இலங்கையின் பங்களிப்பையும் கருத்தில் கொண்டு, 2025 ஆம் ஆண்டில் பின்வரும் திட்டங்களை செயற்படுததுவதற்கு எதிர்பார்க்கப்படுகிறது.

கீழ்நிலை பெற்றோலியத் தொழிற்துறையை ஒழுங்குபடுத்துவதற்கான நிரந்தர ஒழுங்குபடுத்துனரை நியமித்தல்.

பெற்றோலியச் சந்தை நடவடிக்கைகளின் விரிவாக்கம் மற்றும் சந்தையில் புதிய போட்டி நிறுவனங்கள் உள்நுழைவதால், பெற்றோலியப் பொருட்களின் தரத்தை பராமரிக்கவும் நுகர்வோர் பாதுகாப்பை உறுதி செய்யவும், சுயாதீனமான ஒழுங்குபடுததுனர் மற்றும் வலுவான ஒழுங்குபடுத்தல் கட்டமைப்பின் தேவை எழுந்துள்ளது. இதற்கிணங்க, கீழ்நிலை பெற்றோலியத் தொழிற்துறையை ஒழுங்குபடுத்துவதற்கு நிரந்தரமான ஒழுங்குபடுத்துனரை நியமிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

சப்புகஸ்கநந்த சுத்திகரிப்பு நிலையத்தைப் புதுப்பித்தல் மற்றும் புதிய சுத்திகரிப்பு நிலையத்தை நிர்மாணித்தல்

இலங்கையின் பெற்றோலியத் தேவைகளில் சுமார் 25% சப்புகஸ்கந்தை சுத்திகரிப்பு நிலையத்தின் மூலமும , மீதி 75% இறக்குமதி செய்யப்பட்ட சுத்திகரிக்கப்பட்ட பெற்றாலியப் பொருட்கள் மூலமும் பூர்த்திசெய்யப்படுகிறதூ இதனால், பெற்றோலியப் பொருட்களை இறக்குமதிசெய்வதற்கு அதிகளவான அந்நியச் செலாவணி தேவைப்படுகின்றமை குறிப்பிடத்தக்கதாகும். இதன் காரணமாக, உள்நாட்டு பெற்றோலியத் தேவைகளுக்கான எரிபொருளை உளநாட்டு சுத்திகரிப்பு நிலையங்கள் மூலம் உற்பத்தி செய்வதே எங்கள் பிரதானமான நோக்கமாகும், இதனால், சப்புகஸ்கநந்த சுத்திகரிப்பு நிலையத்தைப் புதுப்பிப்பதற்கும் மற்றும் புதிய சுத்திகரிப்பு நிலையத்தை நிர்மாணிப்பதற்கும் விரைவில் நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும்.

திருகோணமலை தாங்கிப்பண்ணையை அபிவிருத்தி செய்தல்

திருகோணமலை எண்ணெய்த் தாங்கிப் பண்ணை தொடர்பாக எட்டப்பட்ட ஒப்பந்தங்களைக் கருத்தில் கொண்டு, இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு உரித்தான இருபத்து நான்கு (24) தாங்கிககள் மற்றும் TPTL க்குச் உரித்தான அறுபத்தொரு (61) தாங்கிககள் ஆகியவற்றை தேசிய பொருளாதாரத்திற்கு நன்மை பயக்கும் வகையிலான வணிக மாதிரிகளின் கீழ் அபிவிருத்தி செய்வதற்கு நடவடிக்கைகள் எடுக்கப்படும்.

2025 ஆம் ஆண்டில், இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்திற்கு உரித்தான இருபத்து நான்கு (24) தாங்கிகளை அபிவிருத்தி செய்வதற்கு ரூ.4010 மில்லியன் அனுமதியளிக்கப்பட்டுள்ளது.

மின்சார வாகனங்களிற்கு மின்னேற்றுவதற்கு இலங்கை பூராகவும் மின்னேற்ற நிலையங்களை தாபித்தல்

இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தால் நடாததப்பட்ட ஆய்வில், எரிபொருள் நிரப்பு நிலையங்களில் மின்சார வாகனங்களுக்கான மின்னேற்றல் நிலையங்களை தாபிப்பதற்கு அதிக வாய்ப்புகள் இருப்பதாக தெரியவந்துள்ளது. இதற்கிணங்க, நாடு முழுவதும் உள்ள சாத்தியமான எரிபொருள் நிரப்பு நிலையங்களில் மின்சார வாகனங்களுக்கான மின்னேற்றல் நிலையங்களை தாபிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளதுடன், இதற்காக 2025 ஆம் ஆண்டில் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம் ரூ. 100 மில்லியனை ஒதுக்கியுள்ளது.

எரிபொருள் களஞ்சியத் திறனை அதிகரித்தல்

நாட்டில் சக்தி வள பாதுகாப்பை உறுதி செய்வதற்குத் தேவையான எரிபொருளை களஞ்சியப்படுத்தி பராமரிக்கப்படல் வேண்டும். தற்போது, வரையறுக்கப்பட்ட இலங்கைப் பெற்றோலிய களஞ்சிய முனையத்தின் மொத்த களஞ்சியத் திறன் 447,140 மெற்றிக் தொன் ஆகும். இத் திறனை மேலும் அதிகரிப்பதற்கு, பின்வருமாறு புதிய களஞ்சியத் தாங்கிகளை தாபிப்பதற்கு திட்டமிடப்பட்டுள்ளது.

விபரம்	மதிப்பீடு செய்யப்பட்ட செலவினம்	நிதியீட்டம்
கொலன்னாவை முனையத்தில் 64,000m^2 மொத்த கொள்ளளவு திறன் கொண்ட 06 களஞ்சியத் தாங்கிகளை நிர்மாணித்தல்	ரூ.3,374 மில்லியன்	வரையறுக்கப்பட்ட இலங்கைப் பெற்றோலிய களஞ்சிய முனையம்
கொலன்னாவை முனையத்தில் 22,000m^2 மொத்த கொள்ளளவு திறன் கொண்ட 02 களஞ்சியத் தாங்கிகளை நிர்மாணித்தல்	ரூ.1,470.4 மில்லியன்	வரையறுக்கப்பட்ட இலங்கைப் பெற்றோலிய களஞ்சிய முனையம்
முத்துராஜவல முனையத்தில் 40,000m^2 மொத்த கொள்ளளவு திறன் கொண்ட 03 களஞ்சியத் தாங்கிகளை நிர்மாணித்தல்	ரூ.3,496 மில்லியன்	வரையறுக்கப்பட்ட இலங்கைப் பெற்றோலிய களஞ்சிய முனையம்

எரிபொருள் பரிமாற்றல் குழாய் முறைமையை அபிவிருத்தி செய்தல்

கொழும்பு துறைமுகத்திலிருந்து கொலன்னாவை முனையத்திற்கு எரிபொருளைக் கொண்டு செல்லும் குழாய் அமைப்பானது மிகவும் பழமையானதுடன் பழுதடைந்த நிலையிலும் உள்ளது. இதனால் எரிபொருள் கசிவு ஏற்படுவதோடு, எரிபொருளை இறக்குவதற்கு அதிக நேரமும் செலவினமும் ஏற்படுகிறது. எனவே, எரிபொருள் இறக்குதல் மற்றும் பரிமாற்றுதல் ஆகிய செயற்பாடுகளை வினைத்திறன்மிக்கதாக்கும் வகையில் குழாய்த் தொகுதியொன்ற அமைப்பதற்கு திட்டமிடப்படடுள்ளது.

விபரம்	மதிப்பீடு செய்யப்பட்ட செலவினம்	நிதியீட்டம்
கொழும்பு துறைமுகத்திலிருந்து கொலன்னாவை முனையம் வரை 18 அங்குல விட்டம் கொண்ட குழாய் பாதையை நிர்மாணித்தல்.	ரூ.2,852.5 மில்லியன்	வரையறுக்கப்பட்ட இலங்கைப் பெற்றோலிய களஞ்சிய முனையம்
கொலொனாவ முனையத்திலிருந்து களனிதிஸ்ஸ மின் உற்பத்தி நிலையம் (நாப்தா) வரை 12 அங்குல விட்டம் கொண்ட குழாய் பாதையை நிர்மாணித்தல்.	ரூ.1,444 மில்லியன்	வரையறுக்கப்பட்ட இலங்கைப் பெற்றோலிய களஞ்சிய முனையம்
முத்துராஜவெலவிலிருந்து கட்டுநாயக்க விமான நிலையத்திற்கு விமான எரிபொருளைக் கொண்டு செல்வதற்கான குழாய்த் தொகுதியை நிர்மாணித்தல்	ரூ.18,000 மில்லியன்	இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனம்

- புதிய பெற்றோலியம் மற்றும் இயற்கை வாயு வளங்களை அடையாளம் காணுதல் மற்றும் பொருத்தமான முதலீட்டாளரைக் அடையாளம் காண்பதற்கு ஏற்கனவே உள்ள கண்டுபிடிப்புகளை மதிப்பீடு செய்தல் மற்றும் இது தொடர்பாக கூட்டு ஆய்வு ஒப்பந்தங்களில் ஈடுபடுதல்

- தொழில் வல்லுநர்களின் உதவியுடன் வளர்ந்து வரும் பெற்றோலியத் தொழிற்துறைக்கான தேசியக் கொள்கையை உருவாக்குதல்.

- திருகோணமலையில் தற்போதுள்ள 61 எண்ணெய் தாங்கிகளை சர்வதேச ரீதியில் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனங்களுடன் கூட்டு முயற்சியாக அபிவிருத்தி செய்தல் மற்றும் இலங்கை பெற்றோலியக் கூட்டுத்தாபனத்தின் கீழ் தற்போதுள்ள 24 எண்ணெய் தாங்கிகளை பல கட்டங்களாக அபிவிருத்தி செய்தல்

- தூய்மையான இலங்கை திட்டத்தின் கீழ் தேர்ந்தெடுக்கப்பட்ட எரிபொருள் நிலையங்களில் சுகாதார வசதிகளை மேம்படுத்துதல்

அத்தியாயம் 03

2024 திசம்பர் மாதம் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான ஒட்டுமொத்த நிதி சார்ந்த செயலாற்றுகை

அத்தியாயம் 03

2024திசம்பர் மாதம் 31 ஆம் திகதியில் முடிவடைந்த ஆண்டிற்கான ஒட்டுமொத்த நிதி சார்ந்த செயலாற்றுகை

அறிக்கையிடும் அறிப்படை

1) **அறிக்கையிடப்படும் காலப் பகுதி**

   2024 ஆம் ஆண்டு ஜனவரி மாதம் 01 ஆம் திகதி முதல் திசம்பர் மாதம் 31 ஆம் திகதி வரையான காலப் பகுதி இந்த நிதிக் கூற்றுக்களுக்குரிய அறிக்கையிடும் காலப் பகுதியாகும்.

2) **அளவீட்டு அடிப்படை**

   நிதிக் கூற்றுக்கள் வரலாற்று ஆகுசெலவு அடிப்படையில் தயாரிக்கப் பட்டுள்ளன. சில சொத்துக்கள் மீள்விலை மதிப்பிடப்பட்ட பெறுமானத்திற்கு மேம்படுத்தப்பட்டுள்ளன. வேறெந்த வகையிலும் குறிப்பிடப்படாதவிடத்து, கணக்குகள் மேம்படுத்திய நிதி அடிப்படையில் தயாரிக்கப்படுகின்றன. நிதிக் கூற்றுக்கள் இலங்கை ரூபாக்களில் அண்ணளவாக எடுத்துரைக்கப்பட்டுள்ளன.

3) **வருமானம் இனங்காணல்**

   பரிமாற்றத்தில் உள்ள கொடுக்கல்வாங்கல்களினதும் மற்றும் பரிமாற்றத்தில் அல்லாத கொடுக்கல்வாங்கல்களினதும் வருமானம் அத்தகைய கொடுக்கல் வாங்கல்களின் வரி செலுத்தப்படும் காலப் பகுதி கருத்திற் கொள்ளப்படாமல் கணக்கீட்டு காலப் பகுதியினுள் நிதி கிடைப்பனவுக்கு ஏற்ப இனங்காணப் படுகின்றது.

4) **சொத்துக்களையும், பொறித் தொகுதிகளையும் மற்றும் உபகரணங்களையும் இனங்காணலும் மற்றும் அவற்றை அளவிடுதலும்**

   சொத்துக்கஞ்ககான எதிர்கால பொருளாதார நன்மை நிறுவனத்திற்கு கிடைப்பது உறுதிசெய்யப்பட்டுள்ள மற்றும் அந்த சொத்துக்கள் நம்பத்தகுந்த விதத்தில் அளவிட முடியுமாக உள்ள சந்தர்ப்பத்தில் அத்தகைய சொத்துக்கள், பொறித் தொகுதிகள் மற்றும் உபகரணங்கள் இனங்காணப்படுகின்றன.
   சொத்துக்களும் உபகரணங்களும் ஆகுசெலவில் இனங்காணப்படுகின்றன. ஆகுசெலவு மாதிரி ஏற்புடையதாகாத சந்தர்ப்பங்களில் மீளவிலை மதிப்பிடப் படும் பெறுமானம் பிரயோகிக்கப்படுகின்றது.

5) **சொத்துக்களினதும், பொறித் தொகுதிகளினதும் மற்றும் உபகரணங்களினதும் ஒதுக்கம்**

   இந்த ஒதுக்கக் கணக்கு சொத்துக்களினதும், பொறித் தொகுதிகளினதும் மற்றும் உபகரணங்களினதும் ஒத்த கணக்காகும்.

6) **காசும் மற்றும் காசு ஒப்புரவுகளும்**

   காசும் மற்றும் காசு ஒப்புரவுகளிலும் 2024 திசம்பர் மாதம் 31 ஆம் திகதியில் கையிருப்பில் உள்ள உள்நாட்டுப் பரிவர்த்தனை நாணயங்களும் உள்ளடங்கும்.

3.1 நிதிச் செயலாற்றுகை கூற்று

ஏசீஏ-எப்

2024 டிசம்பர் 31 இல் முடிவடைந்த ஆண்டிற்கான நிதிச் செயலாற்றுகைக் கூற்று

(ரூபா)

திருத்தப்பட்ட ஒதுக்கீடு 2024		குறிப்பு	உண்மை நிலை 2024	உண்மை நிலை 2023	
-	**வருமானப் பெறுகைகள்**		-	-	
-	வருமான வரி	1	-	-	ஏசீஏ-1
-	உள்ளூர் பொருட்கள் மற்றும் சேவைகள் மீதான வரி	2	-	-	ஏசீஏ-1
-	சர்வதேச வர்த்தகம் மீதான வரிகள்	3	-	-	ஏசீஏ-1
1,800,000,000	வரியில்லாத வருமானங்களும் ஏனையவையும்	4	3,158,283,029	1,724,530,475	
1,800,000,000	**மொத்த வருமானப் பெறுகைகள் (அ)**		**3,158,283,029**	1,724,530,475	
-	**வருமானமற்ற பெறுகைகள்**		-	-	
-	திறைசேரி பணிமுற்பணங்கள்		7,941,916,912	2,190,981,500	ஏசீஏ-3
-	வைப்புகள்		896,711	5,054,780	ஏசீஏ-4
-	முற்பணக் கணக்குகள்		11,525,177	11,878,897	ஏசீஏ-5
-	ஏனைய பிரதான பேரேட்டு கணக்கின் பெறுகைகள்		-	-	
-	**மொத்த வருமானம் அல்லாத பெறுகைகள் (ஆ)**		**7,954,338,800**	2,207,915,177	
1,800,000,000	**மொத்த வருமானப் பெறுகைகளும் வருமானம் அல்லாத பெறுகைகளும் இ = (அ)+(ஆ)**		**11,112,621,829**	3,932,445,652	
	திறைசேரிக்கான அனுப்பீடு (ஈ)		613,559,261	198,628,192	
	தேறிய வருமானம் கிடைப்பனவு மற்றும் வருமானம் அல்லாத கிடைப்பனவு உ = (இ)-(ஈ)		**10,499,062,568**	3,733,817,460.00	
	கழி : செலவினம்				
-	**மீண்டுவரும் செலவினம்**		-	-	
187,610,000	சம்பளம், கூலி, மற்றும் ஏனைய ஊழியர் அனுகூலங்கள்	5	172,701,438	163,839,665	ஏசீஏ-2(ii)
283,225,000	ஏனைய பொருட்கள் சேவைகள்	6	231,472,868	237,439,889	ஏசீஏ-2(ii)
438,540,000	மானியங்கள், கொடைகள் மற்றும் மாற்றல்கள்	7	343,781,526	312,925,050	ஏசீஏ-2(ii)
-	வட்டிக் கொடுப்பனவுகள்	8	-	-	
100,000	ஏனைய மீண்டுவரும் செலவினம்	9	500	67,884	
909,475,000	**மொத்த மீண்டுவரும் செலவினம் (ஊ)**		**747,956,332**	714,272,488	
	மூலதனம் செலவினம்				
11,680,000	மூலதனச் சொத்துக்களின் புணரமைப்பும், மேம்படுத்தலும்	10	5,167,451	11,333,067	ஏசீஏ-2(ii)
8,411,413,000	மூலதனச் சொத்துக்களின் கொள்வனவு	11	2,456,703,933	975,471	ஏசீஏ-2(ii)
8,022,000,000	மூலதன மாற்றல்கள்	12	7,530.808.674	12,566,391,531	ஏசீஏ-2(ii)
-	நிதிச் சொத்துக்களின் கொள்வனவு	13	-	-	ஏசீஏ-2(ii)
1,232,632,000	திறன் விருத்தி	14	527,644,374	-	
30,000,500,000	ஏனைய மூலதனச் செலவினங்கள்	15	15,603,436,028	-	
47,678,225,000	**மொத்த மூலதனம் செலவினம் (எ)**		**26,123,760,460**	12,578,700,069	
	வைப்புக் கொடுப்பனவுகள்		1,071,012	5,543,323	ஏசீஏ-4
	முற்பணக் கொடுப்பனவுகள்		11,585,407	12,908,270	ஏசீஏ-5
	ஏனைய பிரதான பேரேட்டுச் செலவினம்		-	-	
	மொத்தபிரதான பேரேட்டுச் செலவினம் (ஏ)		12,656,419	18,451,593	
	மொத்த செலவினம் ஐ = (ஊ+எ+ஏ)		26,884,373,210	13,311,424,150	
(46,787,700,000)	**டிசம்பர் 31 இல் உள்ளவாறு மீதி ஒ = (உ-ஐ)**		(16,385,310,642)	(9,577,606,690)	
	பணிமுற்பண சரிப்படுத்தல் அறிக்கையின்படி மீதி		(16,385,998,643)	(9,577,606,690)	ஏசீஏ-7
-	**டிசம்பர் 31ல் உள்ளவாறான பணிமுற்பண மீதி**		688,001	-	ஏசீஏ-3
			(16,385,310,642)	(9,577,606,690)	

3.2 நிதி நிலைமைக் கூற்று

ஏசீஏ -பீ

வலுசக்தி அமைச்சு
2024 டிசம்பர் 31 இல் உள்ளவாறான
நிதி நிலைமைக் கூற்று

	குறிப்பு	உண்மை நிலை 2024 ரூபா	2023 ரூபா
நிதி சொத்துக்கள் அற்றது			
ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரணம்	ஏசீஏ-6	745,479,913	746,481,280
நிதி சொத்துக்கள்			
முற்பணக் கணக்குகள்	ஏசீஏ-5/5ஏ	31,886,066	31,825,836
காசு மற்றும் காசுக்குச் சமனானவை	ஏசீஏ-3	688,001	-
மொத்த சொத்துக்கள்		778,053,980	778,307,116
தேறிய சொத்துக்கள் / உரிமைப் பங்கு			
திறைசேரிக்கு தேறிய சொத்துக்கள்		21,933,522	21,698,991
ஆதனம், பொறித் தொகுதி மற்றும் உபகரண ஒதுக்கம்		745,479,913	746,481,280
வாடகை மற்றும் பணி முற்பண ஒதுக்கம்	ஏசீஏ-5பீ	9,550,000	9,550,000
நடைமுறைப் பொறுப்புக்கள்			
வைப்புக் கணக்குகள்	ஏசீஏ-4	402,544	576,845
தீர்க்கப்படாத பணிமுற்பண மீதி	ஏசீஏ-3	688,001	-
மொத்தப் பொறுப்புக்கள்		778,053,980	778,307,116

பக்க இலக்கம் 8 முதல் 74. வரை ஏசீஏ 1 முதல் ஏசீஏ 7 வரையான மாதிரிப் படிவங்களின் மூலம் சமர்ப்பிக்கப்படுகின்ற கணக்குத் தகவல்கள் மற்றும் குறிப்புகளின்/பின்னிணைப்புகளின் பக்க இலக்கம் 75 முதல் 121 வரை உள்ளடங்கியுள்ள ஏனைய கணக்குக் குறிப்புகளின் விபரமும் இந்த இறுதிக் கணக்குகளில் உள்ளடங்கிய பகுதியாகும். 2024 ஆம் ஆண்டின் 16.12.2024 திகதியிடப்பட்ட இல 06 அரச கணக்குகள் விதிமுறைகள் மற்றும் அரச நிதி விதிமுறைகள் 150 மற்றும் 151 ஆகியவற்றின் தேவைகளுக்கு ஏற்ப நிதி நிலமைக்கூற்றுக்கள் தயாரிக்கப்பட்டுள்ளன. அதனால் மேலேயுள்ள இறுதிக் கணக்குகளில் குறிப்பிடப்பட்டுள்ள தொகைகள், அது தொடர்பான கணக்குக் குறிப்புகள் மற்றும் ஏனைய கணக்குத் தகவல்கள் திறைசேரிப் புத்தகங்களுடன் சீராக்கம் செய்யப்பட்டுள்ளது என்பதையும் அவை அந்தத் தொகைகளுடன் உடன்படுகின்றது என்பதையும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

நிதி நிருவாகத்திற்காக வினைத்திறன்மிக்க உள்ளக நிருவாகத் தொகுதியொன்று அறிக்கையிடும் நிறுவனத்தில் காணப்படுகின்றது எனவும் நிதி நிருவாகத்திற்காக உள்ளக நிருவாகத் தொகுதியின் செயற்திறனை மேற்பார்வை செய்வதற்கும் அதற்கு அமைவாக அந்தத் தொகுதியை வினைத்திறனுடன் நடைமுறைப்படுத்துவதற்குத் தேவையானவாறு மாற்றங்களை மேற்கொள்வதற்கும் அடிக்கடி மீளாய்வுகள் மேற்கொள்ளப்படுகின்றது எனவும் இத்தால் சான்றுப்படுத்துகிறோம்.

பிரதான கணக்கீட்டு உத்தியோகத்தர்	கணக்கீட்டு உத்தியோகத்தர்	பிரதான நிதி உத்தியோகத்தர்/ பிரதான கணக்காளர் பணிப்பாளர்(நிதி)/ஆணையாளர்(நிதி)
பெயர்:	பெயர்:	பெயர் :
பதவி :	பதவி :	
திகதி : 2025/02/25	திகதி : 2025/02/25	திகதி : 2025-02-25
Prof. K.T.M. Udayanga Hemapala Secretary Ministry of Energy No. 437, Galle Road, Colombo - 03.	Prof. K.T.M. Udayanga Hemapala Secretary Ministry of Energy No. 437, Galle Road, Colombo - 03.	A.M.S. Malkanthi Chief Financial Officer Ministry of Power and Energy No. 437, Galle Road, Colombo 03.

3.3 காசுப் பாய்ச்சல் கூற்று

ஏசீஏ- சீ

வலுசக்தி அமைச்சு
2024 டிசம்பர் 31 இல் உள்ளவாறான
காசுப் பாய்ச்சல் கூற்று

	உண்மை	
	2024	**2023**
	ரூபா	ரூபா
தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்		
மொத்த வரிப் பெறுகைகள்	-	-
கட்டணங்கள், தண்டப்பணங்கள், தண்டனைகள் மற்றும் உத்தரவுப் பத்திரங்கள்	742,592,829	453,923,675
இலாபம்	-	-
வருமானம் அல்லாத பெறுகைகள்	-	-
ஏனைய வருமான தலைப்புகளுக்காக சேகரிக்கப்பட்ட வருமானம்	2,634,824,309	7,601,420
கிடைக்கப்பெற்ற கட்டுநிதி	7,941,916,912	2,190,981,500
முற்பணங்களை அறவிடல்	10,410,029	10,264,823
வைப்புக்களின் பெறுகை	896,711	5,054,780
செயற்பாடுகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (அ)	**11,330,640,790**	**2,667,826,198**
கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு		
ஆளுக்குரிய வேதனங்கள் மற்றும் தொழிற்பாடுக் கொடுப்பனவுகள்	403,125,625	400,383,012
மானியங்களும் மாற்றுக் கொடுப்பனவுகளும்	112,277,526	122,336,686
ஏனைய செலவினத் தலைப்புகளுக்காக மேற்கொள்ளப்பட்ட செலவினம்	1,245,856	1,873,034
திறைசேரிக்குத் தீர்க்கப்பட்ட பணிமுற்பணம்	613,559,261	198,628,192
முற்பணக் கொடுப்பனவு	11,428,107	13,158,270
வைப்புக் கொடுப்பனவு	1,071,012	5,543,323
தொழிற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஆ)	**1,142,707,387**	**741,922,517**
தொழிற்பாட்டு செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (இ)=(அ)-(ஆ)	**10,187,933,403**	**(1,925,903,681)**
முதலீட்டு செயற்பாடுகளிருந்தான காசுப் பாய்ச்சல்		
வட்டி	-	-
பங்கு இலாபம்	-	-
உரிமை இழந்த ஏற்பாடுகள் மற்றும் பௌதீக சொத்துக்களின் விற்பனை	-	-
உப கடன்கள் மீதான அறவீடுகள்	-	-
முதலீட்டு நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஈ)		
கழி - பகிர்ந்தளிக்கப்பட்ட காசு:		
மூலதன செலவினம்	10,187,245,402	1,925,903,681
முதலீட்டுச் செயற்பாடுகளுக்கு வழங்கப்பட்ட மொத்தக் காசு (உ)	10,187,245,402	1,925,903,681
முதலீட்டுச செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஊ)=(ஈ)-(உ)	(10,187,245,402)	(1,925,903,681)
தொழிற்பாடுகள் மற்றும் முதலீட்டுச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (எ)=(இ)+(ஊ)	688,001	
நிதிச் செயற்பாடுகளிலிருந்தான காசுப் பாய்ச்சல்	-	-
உள்ளுர்க் கடன்கள்	-	-
வெளிநாட்டுக் கடன்கள்	-	-
பெற்ற நன்கொடைகள்	-	-
நிதி நடவடிக்கைகளிலிருந்து உருவாக்கப்பட்ட மொத்தக் காசு (ஏ)		
கழி - பகிர்ந்நதளிக்கப்பட்ட காசு:	-	-
உள்ளுர் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள்	-	-
வெளிநாடுக் கடன்கள் மீதான மீளக் கொடுப்பனவுகள்	-	-
நிதிச் செயற்பாடுகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட்ட மொத்தக் காசு (ஐ)		
நிதிச் செயற்பாடுகளிலிருந்தான தேறிய காசுப் பாய்ச்சல் (ஒ)=(ஏ)-(ஐ)		
காசில் ஏற்பட்ட தேறிய அசைவு (ஓ)=(எ) +(ஒ)	688,001	-
ஜனவரி 01 ஆம் திகதியிலுள்ளவாறான ஆரம்ப காசு மீதி	-	-
டிசம்பர் 31ஆம் திகதியிலுள்ளவாறான இறுதிக் காசு மீதி	**688,001**	**-**

3.4 வருமானம் சேகரிக்கும் செயலாற்றுகை

வருமானக் குறியீடு	வருமானக் குறியீட்டு விபரம்	ஆரம்ப மதிப்பீடு		சேகரித்த வருமானம்	
		ஆரம்ப மதிப்பீடு (ரூ.)	வருமான மதிப்பீடு (ரூ.)	தொகை (ரூ.)	இறுதி வருமான மதிப்பீட்டின் % வீதமாக
2003.02.21	வரி சாராத வருமானம் மற்றும் பெற்றோலியக் கைத்தொழில் அமைச்சுக்குரிய கட்டணங்கள்	1,720,000,000.00	1,800,000,000.00	3,158,283,029.00	175%

3.5 ஒதுக்கிய நிதிப் பயன்பாட்டு செயலாற்றுகை

நிதியேற்பாட்டு வகை	ஒதுக்கிய நிதியேற்பாடு		உண்மையான செலவு	பயன்படுத்திய நிதியேற்பாடு, நிறைவு செய்த இறுதி நிதியேற்பாட்டின் % வீதமாக
	ஆரம்ப நிதியேற்பாடு	இறுதி நிதியேற்பாடு		
மீண்டெழும்	910,000,000.00	909,475,000.00	747,956,332.00	82%
மூலதன	42,073,000,000.00	47,678,225,000.00	26,123,760,460.00	55%

3.6 நி.பி.கு. இலக்கம் 208 இன் பிரகாரம் வழங்கிய நிதியேற்பாடு

	நிதியேற்பாடு கிடைத்த அமைச்சு / திணைக்களம்	பாட்டின் நோக்கம்	நிதியேற் பாட்டு வகை	ஒதுக்கிய நிதியேற்பாடு		உண்மை யான செலவு (ரூ.)	பயன்படுத்திய நிதியேற்பாடு, வழங்கிய இறுதி நிதியேற்பாடுகளின் % வீதமாக
				ஆரம்ப நிதியேற் பாடு (ரூ)	இறுதி நிதியேற்பாடு (ரூ)		
1	இலங்கைப் புகையிரதத் திணைக்களம்	அமைச்சின் ஊழியர்களுக்கு வழங்கிய இலவச புகையிரத ஆணைச்சீட்டுக்கள்	மீண்டெழும்	847,100.00	847,100.00	847,100.00	100%
2	திறைசேரியின் செயற்பாடுகள் திணைக்களம்	இ.மி.ச. பெற்ற வெளிநாட்டு கடன் கணக்கீடு	மூலதன	30,000,000,000.00	30,000,000,000.00	15,603,436,028.00	52%
3	திறைசேரியின் செயற்பாடுகள் திணைக்களம்	கொழும்பில் கழிவுகளிலிருந்து எரிசக்தியை உருவாக்கும் திட்டத்திற்கான கணக்கியல் செலவுகளை CEB பெறுதல்	மூலதன	1,750,000,000.00	2,110,000,000.00	2,109,921,098.20	100%

4	திறைசேரியின் செயற்பாடுகள் திணைக்களம்	தொழிலாளர் பயிற்சிக்காக ஜப்பான் சர்வதேச ஒத்துழைப்பு நிறுவனத்திடமிருந்து பெறப்பட்ட நன்கொடைக்கான கணக்கு	மூலதன	22,000,000.00	22,000,000.00	557,291.29	3%
5	திறைசேரியின் செயற்பாடுகள் திணைக்களம்	CEB ஆல் செயல்படுத்தப்படும் கொரிய மானிய உலர்மின்கல சக்தி களஞ்சிய அமைப்பு (BESS) க்கான கணக்கியல் செலவுகள்.	மூலதன	3,239,000,000.00	2,379,468,526.96	2,379,468,526.96	73%
6	திறைசேரியின் செயற்பாடுகள் திணைக்களம்	இந்திய அரசாங்கத்தின் கீழ் SLSEA க்கு வழங்கப்பட்ட வெளிநாட்டுக் கடன்களைக் கணக்கிடுதல்	மூலதன	600,000,000.00	5,840,000,000.00	5,353,052,576.49	92%
7	திறைசேரியின் செயற்பாடுகள் திணைக்களம்	இந்திய அரசாங்கத்தால் SLSEA-க்கு நன்கொடையாக வழங்கப்பட்ட/ வழங்கப்பட்ட கணக்கியல் செலவினங்கள்.	மூலதன	3,600,000,000.00	3,600,000,000.00	327,924,478.02	9%
8	திறைசேரியின் செயற்பாடுகள் திணைக்களம்	USAID நிதியுதவியின் கீழ் இலங்கை எரிசக்தி திட்டத்திற்கான கணக்கியல் செலவினங்கள்.	மூலதன	1,210,000,000.00	1,210,000,000.00	526,482,282.38	44%
9	இலங்கை சுங்கம்	கொரிய குடியரசின் அரசாங்கத்தின் கீழ் SLSEA-க்கான கணக்கியல் செலவினங்கள்.	மூலதன	1,087,000,000.00	1,228,450,678.04	1,143,450,678.04	93%
10	திறைசேரியின் செயற்பாடுகள் திணைக்களம்	ஆசிய அபிவிருத்தி வங்கியின் (ADB) கீழ் SLSEA-க்கான கணக்கியல் செலவினங்கள்	மூலதன	122,000,000.00	122,000,000.00	91,864,124.52	75%
11	திறைசேரியின் செயற்பாடுகள் திணைக்களம்	SLSEA கொரியன் நன்கொடை மூலம் செயற்படுத்தப்படும் வளிச்சீராக்கி ஆய்வுகூடத்திற்கான கணக்கியல் செலவினங்கள	மூலதன	218,000,000.00	218,000,000.00	101,774,770.00	47%
12	திறைசேரியின் செயற்பாடுகள் திணைக்களம்	இலங்கை அணுசக்தி சபையால் (SLAEB) வழங்கப்பட்ட உபகரணங்களுக்கான கணக்கியல் செலவினங்கள்	மூலதன	25,000,000.00	743,080,795.00	689,109,422.00	93%
13	திறைசேரியின் செயற்பாடுகள் திணைக்களம்	சர்வதேச அணுசக்தி நிறுவனம் (IAEA) வழங்கிய உபகரணங்களுக்கான கணக்கியல் செலவினங்கள்	மூலதன	109,000,000.00	113,700,000.00	99,290,136.16	87%
14	திறைசேரியின் செயற்பாடுகள் திணைக்களம்	இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகார சபை	மீண்டெழும்	140,000,000.00	127,250,000.00	127,250,000.00	91%
15	திறைசேரியின் செயற்பாடுகள் திணைக்களம்	இலங்கை நிலைபெறுதகு சக்தி அதிகார சபை	மூலதன	50,000,000.00	50,000,000.00	50,000,000.00	100%
16	திறைசேரியின் செயற்பாடுகள் திணைக்களம்	இலங்கை அணு சக்தி சபை	மீண்டெழும்	35,000,000.00	47,750,000.00	47,750,000.00	100%
17	திறைசேரியின் செயற்பாடுகள்	இலங்கை அணு சக்தி சபை	மூலதன	20,000,000.00	20,000,000.00	15,860,000.00	79%

	திணைக்களம்						
18	திறைசேரியின் செயற்பாடுகள் திணைக்களம்	இலங்கை அணு சக்தி ஒழுங்குறுத்துகை சபை	மீண்டெழும்	55,000,000.00	55,000,000.00	30,790,000.00	56%
19	திறைசேரியின் செயற்பாடுகள் திணைக்களம்	இலங்கை அணு சக்தி ஒழுங்குறுத்துகை சபை	மூலதன	2,000,000.00	2,000,000.00	1,975,000.00	99%
20	திறைசேரியின் செயற்பாடுகள் திணைக்களம்	பெற்றோலிய அபிவிருத்தி அதிகார சபை	மீண்டெழும்	55,000,000.00	55,000,000.00	25,714,000.00	47%

3.7 நிதி சாராத சொத்துக்கள் அறிக்கையிடல் செயலாற்றுகை

சொத்துக்கள் குறியீடு	குறியீட்டு விபரம்	2024.12.31 ஆம் திகதிற்கான பொருட்கள் கணக்கெடுப்புக்கு இணங்க உள்ள நிலுவை (ரூ.)	2023.12.31 ஆம் திகதிற்கான நிதி அறிக்கையின் பிரகாரம் உள்ள நிலுவை (ரூ.)	எதிர்காலத்தில் கணக்கீடு செய்யப்படவுள்ள (ரூ.)	முன்னேற்ற % வீதமாக அறிக்கையிடுதல்
9151	கட்டிடங்கள் மற்றும் நிர்மாணங்கள்				
9152	இயந்திராதிகள்	737,341,777.22	737,341,777.22	-	100%
9153	காணிகள்	-	-	-	-
9154	கட்புலனாகா சொத்துக்கள்	8,138,136.00	8,138,136.00	-	100%
9155	உயிரியல் விஞ்ஞான சொத்துக்கள்	-	-	-	-
9160	நிகழும் பணி	-	-	-	-
9180	குத்தகைக்கு விடப்பட்டுள்ள சொத்துக்கள்	-	-	-	-

3.8 கணக்காய்வாளர் நாயகத்தின் அறிக்கை

குறிப்பு: 2024 ஆம் ஆண்டிற்கான கணக்காய்வாளர் நாயகத்தின் கணக்காய்வு அறிக்கை பின்னிணைப்பு 1 எனக் குறிக்கப்பட்டு இணைக்கப்பட்டுள்ளது.

அத்தியாயம் 04

செயலாற்றுகை சுட்டிகள்

அத்தியாயம் 04
செயலாற்றுகை சுட்டிகள்

4.1 நிறுவனத்தின் செயலாற்றுகை சுட்டிகள் (செயற் திட்டத்தின் அடிப்படையில்)

இலங்கையின் மின்சக்திப் பிரிவு மற்றும் வலுசக்திப் பிரிவு ஆகிய பிரிவுகளை வலுசக்தி அமைச்சு உள்ளடக்கியது. மின்சக்திப் பிரிவு மின்சாரம் தொடர்பான செயற்பாடுகளைக் கையாள்கிறது மற்றும் வலுசக்திப் பிரிவு பெற்றோலியம் தொடர்பான செயற்பாடுகளை வழங்குவதற்காக உள்ளது.

பின்வரும் அட்டவணை அமைச்சின் இரு பிரிவுகளின் பிரதான செயல்திறன் குறிகாட்டிகளைக் காட்டுகிறது.

குறிப்பிட்ட குறிகாட்டிகள்		அளவீட்டு அலகு	வெளியீட்டின் முன்னேற்றம் 2024
பிரதான செயலாற்றுகை குறிகாட்டிகள் (KPI)	விபரம்		
மின்சக்திப் பிரிவு			
01. நாட்டின் மின்சாரமயமாக்கல் விகிதம்	மின்சாரத்திற்கான கேள்விக்கு ஏற்ப பொது மக்களுக்கு மின்சார விநியோக இணைப்புகளை வழங்குவதில் மின்சாரத்திற்கான அணுகுபிரவேசத்தை அடையக் கூடிய ஆற்றலை அதிகரிக்கும் முகமாக நாட்டின் மின்சாரப் பகிர்ந்தளிப்பு வலையமைப்பை வியாபித்தல்	சதவீதம்	99.9%
02. தேசிய பங்கில் மீள புதுப்பிக்கத்தக்க சக்தியின் மொத்த நிறுவப்பட்ட திறன்	நாட்டின் மீளபுதுப்பிக்கத்தக்க சக்தி ஒருங்கணைப்பின் நீண்டகால தேவையின் அடிப்படையில் மின் உற்பத்தித் திட்டத்தை செயற்படுத்தல்	சதவீதம்	64%
03. மொத்த மின்சார உற்பத்தி கலவையில் மீளப் புதுப்பிக்கத்தக்க சக்தியின் பங்களிப்பு	பாரியளவான மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி உற்பத்திப் பேட்டைகள் உள்ளடங்கிய மீளப்புதுப்பிக்கத்தகு சக்தி மின் உற்பத்திக் கருத் திட்டங்கள் (நீர்வலு, சூரிய சக்தி, காற்று சக்தி, உயிரணுத் திணிவு சக்தி) ஆகிய சக்தி மின் உற்பத்திக் கருத் திட்டங்களை நாட்டினுள் செயற்படுத்தல்	சதவீதம்	55%
04. அதிக மின்விசை உடைய மின்சார செலுத்துகை மார்க்கங்களின் நீளம் (வலுவான மின்சார பரிமாற்றல் / வலையமைப்பு திறன்)	220 கி.வொ. மற்றும் 132 கி.வொ. மின்சார செலுத்துகை மார்க்கங்களுக்கான கருத் திட்டங்களை செயற்படுத்தி, மின் உற்பத்தி வசதிகளின் மூலம் உற்பத்தியாகும் மின்சாரத்தை நீக்கி சக்திக் கொள்திறன் நிலையங்களுக்கு அனுப்புதல் (துளை வலையமைப்பு நிறுவனத்தை நிறுவுதல்)	கி.மீ. எண்ணிக்கை (திரட்டப்பட்ட) துணை மின்நிலையங்களின் எண்ணிக்கை (திரட்டப்பட்ட)	220kV பாதை நீளம் O.H. (கிமீ) -976 220kV பாதை நீளம் U.G. (கிமீ) -22 132kV பாதை நீளம் O.H. (கிமீ) -2350 132kV பாதை நீளம் U.G. (கிமீ) -50 துணை மின் நிலையம்-90

வலுசக்தி பிரிவு			
01. கீழ் நிலை பெற்றோலியத் தொழிற்துறைக்கான ஒழுங்குபடுத்தல் கட்டமைப்பை நிறுவுதல்	வழங்கப்பட்ட காலக்கெடுவிற்குள் கொள்கை மற்றும் சட்ட வரைவுகள் மற்றும் பங்குதாரர் ஆலோசனைகளை நிறைவு செய்தல்.	சதவீதம்	100%
02.பெற்றோலியப் பொருட்களை வழங்கற் சங்கிலி ஊடாக போதுமானளவில் கிடைத்தல பெற்றோலியப் பொருட்களை போதுமானளவில் வழங்கல்	பிரதான விநியோக நிலையங்களில் (மொத்தக் களஞ்சிய முனையங்கள் மற்றும் சில்லறை விற்பனை நிலையங்கள்) 99% கிடைக்கும் விகிதம்.	சதவீதம்	100%

O.H – Over Head

U.G – Under Ground

மூலம்: வலுசக்தி அமைச்சு

அத்தியாயம் 05

நிலையான அபிவிருத்தி இலக்குகளை (SDG) அடைந்து கொள்ளும் செயலாற்றுகை

அத்தியாயம் 05

நிலையான அபிவிருத்தி இலக்குகளை (SDG) அடைந்துகொள்ளும் செயலாற்றுகை

5.1 மின்சக்தித் துறையின் நிலையான அபிவிருத்தி இலக்குகள் (SDG)

SDG இலக்கு 7 - எல்லோருக்கும் நம்பத்தகுந்த, நிலையான மற்றும் நவீன மின் சக்திற்கான அணுகு பிரவேசத்தை உறுதிப்படுத்தல்.

மின் சக்தி விநியோகம் மற்றும் உரிய மின் சக்திப் பரிவர்த்தனை முறைமைகளுக்கு ஒரு அணுகு பிரவேசம் இல்லாதிருக்கின்றமை பொருளாதார அபிவிருத்திற்கு ஒரு தடையாக உள்ள காரணியாகும். சூழலின் மூலம் மீளப் புதுப்பிக்கத்தகு மற்றும் மீளப் புதுப்பிக்கத்தகு சக்தி அல்லாத பல சக்தி வளங்கள் கிடைக்கின்றன. சூரிய சக்தி, காற்று சக்தி, நீர்வலு, அனல் சக்தி, உயிரணுத் திணிவு சக்தி, இயற்கை எரிவாயு, நிலக் கரி மற்றும் பெற்றோலியம் சக்தி வளங்கள் மூலம் நாட்டில் மின்சாரம் உற்பத்தி செய்யப்படுகிறது.

பச்சைவீட்டு வாயுவை குறைப்பதற்கு நடவடிக்கை எடுக்காமல் கனிய எண்ணெய்யின் பாவனையை அதிகரிப்பது, பூகோள அளவில் காலநிலை வித்தியாசங்கள் அதிகரிப்பதற்கு ஒரு காரணமாக அமைகின்றது. மின் சக்தியின் வினைத் திறனும் மற்றும் மீளப் புதுப்பிக்கத்தகு சக்தியின் பாவனையும் காலநிலை வித்தியாசங்களை குறைப்பதற்கும் மற்றும் இடர் ஆபத்துக்களை குறைப்பதற்கும் பங்களிக்கின்றன.

எனவே, பின்வரும் செயற்பாடுகளின் நிமித்தம் மின் சக்தித் பிரிவு பங்களித்துள்ளது.

